SriLankan Airlines

# ஆண்டறிக்கை 2011-12

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கம்பனித் தகவல்கள் | 01 |
| தொலைநோக்கு மற்றும் பணி | 02 |
| முக்கிய விடயங்கள் | 03 |
| தலைவரின் பொதுநோக்கு | 04 |
| முதன்மை நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு | 08 |
| பணிப்பாளர்களின் விபரக்குறிப்பு | 13 |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 14 |
| பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் | 18 |
| சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 19 |
| சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை | 21 |
| ஐந்தொகை | 22 |
| வருமானக் கூற்று | 23 |
| பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை | 24 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 25 |
| கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்களும் | 26 |
| பத்தாண்டு மீளாய்வு | 55 |
| கலைச் சொல்லாக்கம் | 57 |
| கூட்டம் பற்றிய அறிவித்தல் | 58 |
| பதிலாள் | 59 |
| பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | 60 |

## கம்பனித் தகவல்கள்

**சட்ட ரீதியான வடிவம்**

பகிரங்க வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி

**கம்பனியின் பதிவு இலக்கம்**

**PB 67**

**பணிப்பாளர்கள்**

நிஷாந்த விக்கிரமசிங்க - தலைவர்

நிஹால் ஜயமான ச.ச.

கபில சந்திரசேன - பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்

சமீந்திர ராஜபக்ஷ

மணிலால் பர்னாந்து

லக்ஷ்மி சங்கக்கார

சனத் உக்வத்த

சுசந்த ரட்ணாயக்க

**கம்பனிச் செயலாளர்**

மில்ட்ரெட் பீரிஸ்

**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்**

எயார்லையின்ஸ் நிலையம்
பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்
கட்டுநாயக்கா
இலங்கை

**கணக்காய்வாளர்கள்**

எர்னஸ்ட் அன்ட் யங்
பட்டயக் கணக்காளர்கள்
த.பெ. 101
கொழும்பு 10

## எமது தொலைநோக்கு

ஆசியாவில் மிக முன்னுரிமை வாய்ந்த வான் நிறுவனமாக இருப்பது

## எமது பணி

நாங்கள் வான் போக்குவரத்து தொழிலில் இருந்து வருகிறோம். நாங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமானதும் மகிழ்ச்சி நிறைந்ததுமான பயண அனுபவத்தினை வழங்குகின்றோம். நாங்கள் எமது தொழில் பங்காளர்களுக்கு பல்வேறுபட்ட புதுமையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்த, பரஸ்பரம் இலாபமளிக்கும் சேவைகளை வழங்கி வருகிறோம். நாங்கள் பங்குடமையாளர்களின் இலங்கை பற்றிய இலாபமளிக்கும் சந்தைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன் சமூகத்தின் நலனோம்புகைகளுக்கு பங்களிக்கிறோம். நாங்கள் தகுதியும், முன்கூட்டிய செயற்பாடும் ஊக்கமும் கொண்ட குழுவாக இயங்குகிறோம். எங்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டு அதற்கு விருதும் வழங்கப்பட்டிருக்கிறது.

# முக்கிய விடயங்கள்

| நிதியியல் | | குழுமம் 2012 | குழுமம் 2011 | கம்பனி 2012 | கம்பனி 2011 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | ரூ. மில்லியன் | 92,257.04 | 78,515.24 | 90,544.22 | 77,125.45 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூ. மில்லியன் | 109,177.00 | 81,569.55 | 109,376.82 | 81,334.34 |
| வரிக்கு முன்னைய இழப்பு | ரூ. மில்லியன் | (17,161.04) | (176.74) | (19,675.42) | (377.75) |
| ஆண்டிற்கான தேறிய இழப்பு | ரூ. மில்லியன் | (17,171.99) | (202.32) | (19,678.71) | (381.61) |
| மொத்தச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 69,763.23 | 41,218.62 | 66,571.05 | 38,139.46 |
| பங்குடமையாளர் நிதியம் | ரூ. மில்லியன் | 4,153.55 | 6,302.55 | (1,438.90) | 3,216.82 |

**போக்குவரத்து**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பயணிகள் இயலளவு | கி.இ.கி.மீ மில்லியன் | | | 14,248.94 | 12,481.41 |
| மொத்த இயலளவு | கி.தொ.கி.மீ மில்லியன் | | | 1,978.33 | 1,755.23 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வ.த.ப.கி.மீ மில்லியன் | | | 11,270.23 | 9,584.02 |
| மொத்தமாக கொண்டு செல்லப்பட்ட பாரம் | வ.த.தொ.கி.மீ மில்லியன் | | | 1,338.30 | 1,184.13 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 79.10 | 76.79 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 67.65 | 67.46 |
| இலாப நட்டமற்ற சுமைக் காரணி | % | | | 86.53 | 76.19 |

**அலுவலர் உற்பத்தித்திறன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அலுவலர் தொகை | எண்ணிக்கை | 6,367 | 5,659 | 5,594 | 4,998 |
| ஊழியர் ஒருவருக்கான வருமானம் | ரூ. மில்லியன் | 14.49 | 13.87 | 16.19 | 15.43 |
| ஊழியர் ஒருவருக்கான கூட்டப்பட்ட பெறுமதி | ரூ. மில்லியன் | (0.66) | 1.82 | (1.36) | 1.89 |

**2012 மாச்சில் உள்ளவாறு வானூர்திகளின் தொகுதி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A320-200 | எண்ணிக்கை | | | 7 | 4 |
| A330-200 | எண்ணிக்கை | | | 7 | 5 |
| A340-300 | எண்ணிக்கை | | | 6 | 5 |
| ருவின் ஒட்டர் | எண்ணிக்கை | | | 2 | 2 |
| ஆண்டின் இறுதியில் சேவையிலுள்ள வானூர்திகள் | எண்ணிக்கை | | | 22 | 16 |

### தலைவரின் பொதுநோக்கு

சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் 34ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு தங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் 2011/12ஆம் நிதியாண்டிற்குரிய ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

2011/12ஆம் ஆண்டு, சிறிலங்கன் எயார்லையின்ஸின் "மீள் எழுச்சி ஆண்டு" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது, உங்கள் வானூர்தி நிறுவனம் மற்றும் எங்கள் நாட்டின் வான் போக்குவரத்துடன் தொடர்பான கைத்தொழில்கள் இரண்டினையும் உயர்மட்டமொன்றிற்கு எழுச்சிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிதியியல் ஆண்டுப் பகுதியில் பிறஸ்ரிஜஸ் எயார்லையின் அலையின்ஸ் வண்வோர்ள்ட் சிறிலங்கனை இப்பிறஸ்ரிஜஸ் எயார்லையின் அலையின்ஸின் உறுப்பினராக தெரிவு செய்த தருணத்தில் எமது முயற்சிகள் 2012/13இன் முதற் காலாண்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை எய்தின.

### இலங்கையின் பொருளாதாரம்

ஐரோப்பாவில் காணப்பட்ட கடுமையான நிதியியல் நெருக்கடி, ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட மெதுவான மீட்சி, சீனா மற்றும் இந்தியாவில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி என்பனவற்றின் தூண்டுதல்களின் காரணமாக உலகளாவிய பொருளாதாரம் கீழ் நோக்கிய போக்கைக் கொண்டிருந்த போதும் இலங்கையின் பொருளாதாரம், போருக்குப் பின்னர் வரவேற்கத்தக்க செயலாற்றமொன்றினைத் தொடர்ந்தும் கொண்டிருந்தது.

மகிந்த சிந்தனையைப் பின்பற்றும் விதத்தில் இலங்கை அரசாங்கத்தின் நீண்ட கால நோக்கு, வலு நிலையங்கள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலையங்கள் என்பன உள்ளிட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை குறிப்பிடத்தக்களவிற்கு முன்னேற்றுவதன் மீது காணப்பட்டது.

### இலங்கைச் சுற்றுலா

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் 901,375 சுற்றுலாப் பயணிகளின் சாதனைமிக்க வருகைகளுடன் 2011/12ஆம் நிதியாண்டில் இன்னொரு மைல்கல்லை அடைந்தது. இது 2010/11இல் காணப்பட்ட 709,191 இனை விட 21 சதவீதத்தினைக் கொண்ட அதிகரிப்பாகும்.

ஐரோப்பாவில் காணப்பட்ட பொருளாதார மந்தம் ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளின் நீண்ட தூரப் பயணங்களின் மீது தடங்கல்களை ஏற்படுத்தியிருக்கும் போல் தோன்றுகிறது. எனினும், மத்திய கிழக்கு, தென்னாசியா, தூர கிழக்கு, அவுத்திரேலியா மற்றும் வட அமெரிக்கா ஆகிய அனைத்து இடங்களிலும் இலங்கைச் சுற்றுலாக் கைத்தொழில் கணிசமானளவில் பன்முகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### உலகளாவிய வான் போக்குவரத்துக் கைத்தொழில்

2011 கலண்டர் ஆண்டில் உலகளாவிய வான் போக்குவரத்துக் கைத்தொழிலின் மொத்த மதிப்பிடப்பட்ட இலாபம் ஐ.அ.டொலர் 7.9 பில்லியனாகவிருந்தது. எனினும், மோசமடைந்த உலகளாவிய பொருளாதார நிலைமைகள் ஒரு இருண்ட நிலைமையைத் தோற்றுவித்தது. இக்கைத்தொழிலானது உயர்ந்த எண்ணெய் விலைகளின் காரணமாக 2011/12 முழுவதும் பாதிக்கப்பட்டது. இன்ரநஷனல் எயார் ரான்ஸ்போர்ட் ஏஜன்சி இத்தொழிற்துறையின் இலாபம் 2012இல் ஐ.அ.டொலர் 3 பில்லியனுக்குக் குறைவடையுமென எதிர்பார்க்கிறது.

### எமது நாட்டிற்கு உதவியளித்தல்

சிறிலங்கன், இலங்கைப் பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கியாக அதன் பங்கினை ஆற்றுவதற்கு பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டது. அவை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- மத்தாளவிலுள்ள நாட்டின் இரண்டாவது சர்வதேச வானூர்தி நிலையத்திற்காக உட்கட்டமைப்பின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பிற்கு ஆதரவளித்தமை;
- பண்டாரநாயக்கா வானூர்தி நிலையத்தின் விரிவாக்கத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்தமை;
- வெளிநாடுகளிலுள்ள இலக்கிடப்பட்ட முக்கிய சந்தைகளில் உலகளாவிய பிரபல்யப்படுத்தல்களுக்கு வசதியளித்ததுடன் முயற்சிகளையும் மேற்கொண்டமை;
- சுற்றுலா, விளையாட்டு மற்றும் கூட்டங்கள், ஊக்குவிப்புக்கள், மாநாடுகள், கண்காட்சி இவை தொடர்பான சர்வதேச நிகழ்வுகளுக்கு ஆதரவளித்தமை.

### விருதுகள்

மீளாய்விற்குரிய இவ்வாண்டுக் காலப்பகுதியிலும் சிறிலங்கன் பின்வருவன உள்ளிட்ட கௌரவ விருதுகளைப் பெற்று அதன் நீண்ட பாரம்பரியத்தைத் தொடர்ந்தது.

- 2012இற்கான மனிதவள முகாமைத்துவ விருதுகளில் அரசுக்குச் சொந்தமான வியாபார வகைக்கான வெள்ளி விருது.
- சர்வதேச வான் போக்குவரத்து கல்விக் கழகத்தினால் இன்ரநஷனல் எயார் ரான்ஸ்போர்ட் ஏஜென்சியினால் தென்னாசியாவில் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களில் மிகச் சிறந்த பத்து நிலையங்களிலொன்றாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மென்பொருள் அபிவிருத்தியில் தர முகாமைத்துவ முறைமைகளுக்கான ஐஎஸ்ஓ 9001: 2008 சான்றிதழ்.

- தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகளுக்கான ஐஎஸ்ஓ/ஐஈசி 27001: 2005 சான்றிதழ்.

- கோலாம்பூர் சர்வதேச வானூர்தி நிலையத்தின் தென்னாசியாவிலிருந்தான மிகச் சிறந்த வான் நிறுவனத் தொழிற்பாட்டாளர் விருது.

- இலங்கைச் சுற்றுலா விருது 2010: "ஹோல் ஒவ் பேம்" இவ்வாண்டிற்கான சிறந்த வான் நிறுவனம் மட்டற்ற சுற்றுலா, ஊக்குவிப்பு மற்றும் மிகச் சிறந்த அச்சு ஊடக வெளியீடான "செறன்டிப் சஞ்சிகை" இற்கான விருது.

### 2011/12ஆம் ஆண்டு

- 2011/12ஆம் ஆண்டிற்கான குழும வருமானம் 2010/11இன் ரூ.78,515.24 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.92,257.04 மில்லியனாக விளங்கியது. இது 18 சதவீதமானதொரு அதிகரிப்பாகும்.

- தொழிற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ.81,569.55 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.109,177 மில்லியனாகக் காணப்பட்டது. இது 34 சதவீதமானதொரு அதிகரிப்பாகும்.

- வரிக்கு முன்னரான இழப்பு 2010/11ஆம் ஆண்டு காலத்தின் இழப்பான ரூ.176.74 மில்லியனிலிருந்து 17,161.04 மில்லியனுக்கு அதிகரித்தது.

- வரிக்குப் பின்னரான தேறிய இழப்பு 2010/11இன் ரூ.202.32 மில்லியன் இழப்புடன் ஒப்பிடுகையில் ரூ.17,171.99 மில்லியனாகக் காணப்பட்டது.

- மொத்தப் பயணிகள் வருமானம் 20 சதவீதத்தினால் ரூ.72,620.39 மில்லியனுக்கு அதிகரித்தது.

- பயணிகள் கிலோமீற்றருக்கான வருமானம் முன்னைய ஆண்டு காலப்பகுதியின் 9,584.02 பயணிகள் கிலோமீற்றர் மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 11,270.23 பயணிகள் கிலோமீற்றர் மில்லியன் வருமானமாகக் காணப்பட்டது.

- 2011/12ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுமொத்த இருக்கைக் காரணி முன்னைய ஆண்டின் 76.79 சதவீதத்திலிருந்து 79.10 சதவீதத்திற்கு அதிகரித்தது.

- 2011/12இல் வான் நிறுவனம் 3.46 மில்லியன் பயணிகளை சுமந்தது. இது முன்னைய ஆண்டின் 2.87 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 21 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.

- மொத்த இயலளவு முன்னைய ஆண்டின் 1,755.23 மில்லியன்களிலிருந்து 1,978.33 மில்லியன் கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர்களுக்கு அதிகரித்தது.

- ஒட்டுமொத்த இயலளவு முன்னைய ஆண்டின் 12,481.41 மில்லியன்களிலிருந்து 14,248.94 மில்லியன் கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர்களுக்கு அதிகரித்தது.

- அலகொன்றிற்கான செலவு 2010/11இன் ரூ.45.92 தொன் கிலோமீற்றர்களிலிருந்து ரூ.56.03 தொன் கிலோமீற்றர்களுக்கு 22 சதவீதத்தினால் அதிகரித்தது.

பின்வரும் காரணங்களினால் கம்பனியின் இழப்புக்கள் அதிகரித்தன:

- ஒரு கலன் எரிபொருளுக்காக செலுத்தப்பட்ட சராசரி விலை கடந்த ஆண்டினை விட 36 சதவீதம் அதிகமாக இருந்தது.

- ஐரோப்பாவில் காணப்பட்ட மந்தம் மற்றைய வான் நிறுவனங்களிடமிருந்தான போட்டி என்பனவற்றின் காரணமாக வருமானம் திருப்திகரமானதிலும் பார்க்கக் குறைவானதாக இருந்தது. வானூர்தியின் பயணிகள் பயண இருப்பிடம் தரமுயர்த்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நன்மைகளை இனிமேல் தான் பெறவேண்டியிருக்கும்.

- மேலதிக இயலளவு மற்றும் துணைப் பணிகளை உயர்த்துவதற்கான மேலதிக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மொத்த நன்மைகள் இனிவரும் ஆண்டுகளில் அடையப்படும்.

பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

- எரிபொருள் சிக்கனப்படுத்தலை உச்சமட்டத்திற்கு உயர்த்துதல். 2011/12இல் புதிய வானூர்திகளை அறிமுகப்படுத்தியமை, கூடியளவு எரிபொருள் சிக்கனங்களைத் தோற்றுவித்தது. வானூர்திகளினது எரிபொருளின் சராசரி விலையும் முன்னைய ஆண்டினை விட 2012/13இல் குறைவாக இருக்குமென எதிர்வுகூறப்படுகிறது.

- இழப்புக்களை ஏற்படுத்தும் துறைகளின் பறப்புக்களின் கால இடைவெளியை ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதுடன் அத்தகைய பறப்புக்களை கூடியளவிற்கு இலாபம் தரும் பாதைகளில் ஈடுபடுத்துதல்.

- புதிய வியாபார வகுப்புச் சாதனத்தினை தீவிரமாகச் சந்தைப்படுத்துதல் உட்பட பல்வேறுபட்ட வழிமுறைகளூடாக பயணிகள் வருமானத்தை மேம்படுத்துதல்.

- வானூர்திகளின் பன்முகப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகள் வருமானப் பங்களிப்புக்களை உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. இவை பொறியியற்படுத்தல், தீர்வையற்ற விற்பனைகள், வானூர்தி தரைப் பணிகளைக் கையாளுதல், இலங்கை பறப்புக் கல்விக் கல்லூரி, சர்வதேச வான் போக்குவரத்துக் கல்விக் கல்லூரி மற்றும் சிறிலங்கன் கேற்றரிங் லிமிடெட் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

- இலங்கை அரசாங்கத்தினால் உள்ளீடு செய்யப்பட்ட மூலதனத்திலிருந்தும் தோன்றிய கடன்பாட்டு இயலளவின் அதிகரிப்பின் காரணமாக கம்பனியின் திரவ நிலைமை மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்

சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் இன்னொரு வெற்றிகரமான ஆண்டை பதிவு செய்ததுடன் சிறிலங்கன் வானூர்திகளில் பயணம் செய்வோருக்கான உணவு வழங்கல் தேவைப்பாடுகளை விரிவாக்குவதில் வரவேற்கத்தக்க உதவிகளை வழங்கியது. இது அதன் மைய வியாபாரமான வானூர்தியில் உணவு வழங்கல், பயணிகள் மாறிச் செல்லும் சுற்றுலா விடுதியினை முகாமைப்படுத்தல் மற்றும் தொழிற்துறைக்குத் தேவையான சலவை வசதிகளை வழங்குதல் என்பனவற்றிற்குப் புறம்பாக பழைய ஒல்லாந்தர் வைத்தியசாலை, வளைவு மண்டபச்சாலையில் “செமென்டு” சிக்னச்சர் உணவுச்சாலையை நடத்துவதன் மூலம் அதன் நடவடிக்கைகளை பன்முகப்படுத்திக் கொண்டது.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் சிறிலங்கன் கேட்டறிங் பின்வரும் விருதுகளைப் பெற்றுக் கொண்டது:

- மத்திய கிழக்கு - ஆபிரிக்கா - தென்னாசியா - இந்திய துணைக் கண்டங்களுக்கான எதிகாட் எயார்லையின்ஸ் இன் மிகச் சிறந்த பிராந்திய உணவு வழங்குநர் விருது.

- சுற்றாடல் அமைச்சிடமிருந்து ‘கிறீன் ஜொப்ஸ்’ விருது.

- தேசிய பசுமை விருதில் கழிவு முகாமைத்துவத்திற்கான தங்க விருது.

- தேசிய வலுச் சிக்கனத்திற்கான தங்க விருது.

### எதிர்காலம்

எமது அதிகரித்த சாதனங்களுடன் சந்தை வாய்ப்புக்களை உச்சப்படுத்துவதன் மீது கவனத்தைச் செலுத்தும் ஐந்தாண்டு வியாபாரத் திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு சிறிலங்கன் எயார்லையின்ஸ் தற்பொழுது எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் நிலைமையில் காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தினால் திறைசேரி முறிகள் வடிவில் உள்ளீடு செய்யப்பட்ட ரூ.14.3 பில்லியன் மூலதனத்தின் மூலம் ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் வான் நிறுவனத்தின் நிதியியல் நிலைமை வலுவாக்கப்பட்டது. இது 1998ஆம் ஆண்டிற்குப் பின்னர் இடம்பெற்ற முதலாவது மூலதன உள்ளீடாகும்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ்சினை தளமாகக் கொண்ட வங்கிகளின் கூட்டமைப்பிலிருந்து நான்காண்டு கடன்பாட்டு வசதிகளைப் பெற்றுக் கொண்டதன் மூலம் 2012/13இன் முதலாம் காலாண்டில் கம்பனி மேலும் வலுவாக்கப்பட்டது. அடுத்துவரும் நான்காண்டு பகுதிகளில் மேலும் மூலதனத்தினை உள்ளீடு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதால் கம்பனியின் மூலதனத் தளம் வலுவடைந்து இதன் வலுவான வளர்ச்சி உறுதிப்படுத்தப்படுகிறது.

பின்வரும் முக்கிய செயற்றிட்டங்களின் தொழிற்பாடுகளுடன் 2012/13 காலப்பகுதியில் சிறிலங்கன் எயார்லையின்ஸ் மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது:

- எமது கணனி முறைமைகளையும் செயற்பாடுகளையும் வண்வோர்ள்ட் எயார்லையின்ஸ் முறைமைகளுடன் இணைத்தல்.

- எமது நீண்ட தூர வானூர்திகளில் பயணிகள் இருப்பிடங்களின் தரமுயர்த்தலை பூரணப்படுத்தல்.

- தென் கொரியாவிலுள்ள சியோலிற்கு பணிகளை ஆரம்பித்தல்.

- வண் வோர்ள்ட் உறுப்பினர்கள் உட்பட ஏனைய வான் நிறுவனங்களுடன் குறியீடுகளை பகிர்ந்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கான பேரப்பேச்சுக்களை தொடங்குதல்.

- எயார் பஸ் ஏ320 இனைப் பேணுவதற்காக பண்டாரநாயக்கா வானூர்தி நிலையத்தில் பிரத்தியேக வானூர்திகளை நிறுத்தி வைக்கும் இடங்களை நிருமாணித்தல்.

- ஏ330 வானூர்தியின் விமானிகளுக்கான பயிற்சிக்காக இரண்டாவது பறப்பு மாதிரி உருவகப்படுத்தல் நிலையமொன்றைத் தொடங்குதல்.

#### பங்கிலாபங்கள்

உயர்ந்த தொழிற்பாட்டுச் செலவின் காரணமாக 2011/12 காலப்பகுதியில் ஏற்பட்ட இழப்பு, எதிர்காலத்திற்கான உபாய முதலீட்டிற்கான வலியுறுத்தல்கள் என்பனவற்றின் காரணமாக சபையானது எமது பங்குடமையாளர்களுக்கு பங்கிலாபங்களை விதந்துரைக்க இயலாதிருக்கிறது.

முடிவுரை

இலங்கையின் வான் போக்குவரத்து மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்களின் மீது பெருமளவு கவனத்தை வைத்திருக்கும் இலங்கையின் சனாதிபதி மேதகு மகிந்த ராஜபக்ஷ அவர்களின் கடப்பாட்டிற்காக நான் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பசில் ராஜபக்ஷ பாஉ அவர்கள் வழங்கிய உதவிக்காகவும் நான் அவரை பாராட்ட விரும்புகிறேன். அத்துடன் இலங்கையின் வான் போக்குவரத்து அமைச்சர் பிறியங்காரா ஜெயரத்தன பாஉ அவர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

சபை உறுப்பினர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர், முகாமைத்துவக் குழு மற்றும் கம்பனியின் அலுவலர்களுக்கு அவர்களது சோர்வற்ற கடின உழைப்பிற்காகவும் அர்ப்பணிப்பிற்காகவும் எனது விசேட நன்றிகள். நான் எமது வான் நிறுவனத்தின் மீது வைத்த நீண்ட கால நம்பிக்கைக்கும் ஆதரவிற்காகவும் இலங்கை அரசாங்கம் உட்பட எமது வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளவும் விரும்புகிறேன்.

ஒப்பம்

நிஷாந்த விக்கிரமசிங்க
தலைவர்
2012 ஓகத்து 17

## முதன்மை நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு

நான் 2011/12 நிதி ஆண்டிற்கான தொழிற்பாட்டு மீளாய்வினையும் கம்பனியின் முன்னோக்கிய பாதை தொடர்பாகவும் சுருக்கமான அம்சங்களையும் தயவுடன் முன் வைக்கின்றேன்.

## மீளாய்விற்குரிய ஆண்டு

கடந்த ஆண்டிற்கான எனது அறிக்கையினை "தற்பொழுது சிறிலங்கன் எயார்லையின்ஸ் அதன் வரலாற்றில் உணர்வு பூர்வமான புதிய அத்தியாயம் ஒன்றினை எழுதிக் கொண்டிருக்கிறது. எமது நாடு மாற்றங்களுக்குட்பட்டு பொருளாதார அபிவிருத்திப் பாதையில் முன்னேற்றமடைந்து வருவதனால் அதற்கேற்ப எமது எயார் லையின்ஸ்சும் அது எதிர்பார்க்கும் முக்கியமானதொரு பங்கினை ஆற்றும் விதத்தில் அது தன்னைத்தானே மாற்றிக் கொண்டு வருகின்றது" என்ற சொற்களுடன் ஆரம்பித்திருந்தேன்.

2011/12ஆம் ஆண்டு உண்மையில் எமக்கு ஒரு சவால்மிக்கதொரு ஆண்டாகவிருந்தது.

கீழ் நோக்கிய போக்கைக் கொண்டிருந்த உலகளாவிய தொழிற்துறை வான் நிறுவனங்களின் மீதும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. எமது வியாபாரத் திட்டமிடல்களுடன் சேர்ந்து செல்லும் விதத்தில் இடர்பாடான நிதியியல் நிலைமைகள் காணப்பட்ட போதும் எமது தொழிற்பாடுகளையும் வியாபாரக்கூறுகளையும் நாம் விரிவாக்கினோம். கீழே மேலோட்டமாக குறிப்பிடப்படுவது போன்று எமது தொழில்களுக்கும் சாதானத்திற்கும் நிச்சயமாக கூட்டப்பட்ட வழங்கக்கூடிய பல தொழில் முன்னெடுப்புக்களை நாம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவோம்.

## வண்வோர்ள்டில் உறுப்புரிமை

உலகின் புகழ் பெற்ற "வண்வோர்ள்ட் எயார்லையின்ஸ்" இன் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமையின் மூலம் நாம் நன்மைகளை பெற்றுக் கொள்வதில் வெற்றி கண்டிருக்கிறோம். இது, கம்பனி உலகம் முழுவதிலுமுள்ள 824 புதிய சேரிடங்களுடன் இணைக்கப்படுவதன் மூலம் அதன் உலகளாவிய பிரசன்னத்தை விரிவாக்கிக் கொள்வதனை இயலச் செய்யுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. வான் நிறுவனத்தின் வளர்ச்சி உபாயத்திற்கு உதவும் விதத்தில் வான் நிறுவன தொழிற்துறையில் மிகப் பெரியதும் மிகச் சிறந்ததுமான வர்த்தக நாம அடையாளங்கள் சிலவற்றுடன் பறப்புக்களை மேற்கொள்வதனை இது இயலச் செய்யும்.

## வானூர்தி தொகுதிகளின் விரிவாக்கம்

ஆய்விற்குரிய ஆண்டு அதன் 33 வருட வரலாற்றில் முன்னைய ஆண்டுகள் எதனையும் விட கூடுதலான வானூர்திகளைக் கொள்வனவு செய்ததைக் காட்டுகிறது. தூண்டுதல் நிகழ்ச்சித்திட்டம் ஐந்து A320 (இதில் ஒன்று 2012/13 முதற்காலாண்டில் பெறப்பட்டது) இரண்டு A330 மற்றும் ஒரு A340 வானூர்திகளையும் உள்ளடக்கியிருந்தது. பழைய A320 வானூர்தி, வானூர்தித் தொகுதிகளிலிருந்தும் நீக்கப்பட்டது.

2011/12 நிதியியல் ஆண்டின் முடிவில் வானூர்தித் தொகுதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்தன:

- ஏழு A320 வானூர்திகள்
- ஏழு A330 வானூர்திகள்
- ஆறு A340 வானூர்திகள்
- இரண்டு டி கபிலன்ட் ருவின் ஒட்டர் (எயார் ரக்ஸிகள்)

## உலகளாவிய வழித்தடம் மற்றும் இயலளவின் விரிவாக்கம்

ஆய்விற்குரிய ஆண்டு எமது வழித்தட வலையமைப்பு 32 நாடுகளிலுள்ள 60 நகரங்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டுகிறது. இவ்விரிவாக்கத்தின் முக்கிய பண்புகள் யாதெனில் மொஸ்கோவிற்கான சேவை ஆரம்பிக்கப்பட்டமையும் சூறிச்சிற்கான சேவை மீண்டும் தொடரப்பட்டமையுமாகும்.

முறையே எயார் கனடா மற்றும் மிகின் லங்கா என்பனவற்றுடனான குறியீட்டுப் பகிர்வு உடன்படிக்கையினூடாக எமது உலகளாவிய வலையமைப்பில் கனடாவிலுள்ள எட்டு நகரங்களும் இந்தியாவிலுள்ள இரண்டு நகரங்களும் சேர்க்கப்பட்டன. இயலளவும் பெரும் எண்ணிக்கையான சேரிடங்களுக்கு அதிகரிக்கப்பட்டதுடன் முக்கிய பண்பாக முக்கிய சந்தைகளான இந்தியா மற்றும் சீனாவிலுள்ள சேரிடங்களுக்கான பறப்புக்களுக்கிடையிலான பறப்புக்களின் தடவைகள் அதிகரிக்கப்பட்டமை விளங்கியது.

வாடிக்கையாளர்களுக்கு கூடியளவு வசதிகளை வழங்கும் பொருட்டு எமது வெளிநாட்டு அலுவலகங்களின் அமைவிடங்கள் மாற்றப்பட்டதுடன் பயணிகள் சேவை முகவர் அலுவலகமொன்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டது.

## எமது வானூர்தியின் பயணிகள் இருப்பிடம் திருத்தியமைக்கப்பட்டது

மீளாய்விற்குரிய ஆண்டில், எமது நீண்ட தூரம் பயணிக்கும் வானூர்தியில் பல ஆடம்பர வசதிகளைப் பொருத்தியதன் மூலம் வான் நிறுவனம் அதன் சாதனத்தினை மீளவமைப்பதற்கான முக்கிய நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கியது. இது, வியாபார வகுப்பில் தட்டையான படுக்கை வசதியுடனான இருக்கை மற்றும் தேவைப்படும் நேரத்தில் பயன்படுத்தக் கூடிய கட்புல செவிப்புல பொழுதுபோக்கு அம்சங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

புதுக்கி அமைப்பதற்கான உயர் செலவு காரணமாக சில காலம் பிற்போடப்பட்டிருந்த இந்நிகழ்ச்சித்திட்டம் இப்பிராந்தியத்திலுள்ள மற்ற வியாபார வகுப்புக்களுக்கு இணையான மிகச் சிறந்த வசதிகளை எமது வான் நிறுவனத்திற்கும் வழங்கியுள்ளது. இவ்வசதிகளைக் கொண்ட வானூர்திகள் எமது ஐரோப்பிய வழித்தடம்களில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் 2012/13இல் நிகழ்ச்சித்திட்டம் முடிவடையும் பொழுது நீண்ட பயணத்தினைக் கொண்ட அனைத்துத் துறைகளுக்கும் ஏற்படுத்தப்படும்.

### சேவைகளின் வழங்கல்

எமது வானூர்தித் தொகுதிகள் மற்றும் வழித்தட வலையமைப்பு என்பனவற்றின் உருவாக்கம் மற்றும் விரிவாக்கம் என்பனவற்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் அனைத்து பகுதிகளுக்குமான சேவை வழங்கல்கள் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கும் தர உயர்வுகளுக்கும் உட்பட்டன.

குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில், சிறிலங்கன் வியாபார வகுப்புப் பயணிகள் தற்பொழுது பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் எயார்போட் அன்ட் எவியேசன் சேர்விஸஸ் (சிறிலங்கா) லிமிடெட்டினால் வழங்கப்படும் சிறப்பு ‘சில்க் றூட்’ என அறியப்படும் பட்டுப் பாதையினூடாக ஆடம்பர பயணப் பரிசோதனைகளை எவ்வித மேலதிக கட்டணமுமின்றி மேற்கொள்வதன் மூலம், பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் மற்றைய வான் நிறுவனங்களுக்கு மேலாக எமது வியாபார வகுப்புப் பயணிகள் இவ்வசதிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதாகும்.

### வாடிக்கையாளர் கருத்துக்களும் அவை தொடர்பான நடவடிக்கைகளும்

வான் நிறுவனம் அத்தகைய குறிப்பிடத்தக்க திருத்தியமைத்தல்களுக்கு உட்பட்டிருப்பதன் காரணமாக எமது முதலீடுகள் வெற்றிகரமானவைகளாக அமைந்துள்ளனவா என்பது பற்றி எமது வாடிக்கையாளர்களின் கருத்துக்களை பெற்றுக் கொள்வது முக்கியமானதொன்றாக மாறியிருக்கிறது. தற்பொழுதுள்ள முறைப்பாடுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொள்கின்ற முறைகளுக்குப் புறம்பாக எமது வானூர்திகள் மற்றும் சேவைகள் தொடர்பான அனைத்து அம்சங்கள் பற்றியும் வாடிக்கையாளர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்தும் பயணிகள் அளவீடு ஒன்றை வான் நிறுவனம் மேற்கொண்டது.

சிறிலங்கன் உலகளாவிய தொடர்பு நிலையத்தின் பணிகள் முழுமையானதும் தடங்கலற்றதுமான வாடிக்கையாளர் பணிகளை கூடியளவிற்கு முழுமையாக வழங்கும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது.

### சிறிலங்கன் கார்கோ

அம்பாந்தோட்டை, கண்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் சரக்கு விற்பனை முகவர் அலுவலகங்களைத் திறந்ததன் மூலம் சிறிலங்கன் கார்கோ அதன் செயற்பரப்பினை விரிவாக்கியது.

இணைப்பினைப் பெருமளவிற்கு வலுப்படுத்துவதற்காக, கம்பனியின் உலகளாவிய சரக்குத் தொழிற்பாடுகள் பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் சரக்கு மையத்தின் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையச் சரக்கு நிலையம் வாடிக்கையாளர்களுக்கு அதன் கூட்டப்பட்ட பெறுமதிச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் வழங்கியதுடன் உற்பத்தித்திறனையும் உயர்த்திக் கொண்டதுடன், சி.சி.சி.ரி கமரா பாதுகாப்பு, பார் குறியீடு மற்றும் ஸ்கானர், அனுப்பப்படும் சரக்குகளை தன்னியக்கமாகவே நிறுத்தல் மற்றும் 6 - அடுக்குச் செயல் முறைமை உள்ளிட்ட பல புதிய வசதிகளையும் சேர்த்துக் கொண்டது.

சிறிலங்கன் கார்கோ தற்பொழுது அம்பாந்தோட்டை பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் சரக்கு நிலையத்தின் கையாளலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

### சிறிலங்கன் என்ஜினியறிங்

சிறிலங்கன் என்ஜினியறிங் வழமையான பேணல் நியதிகளில் சிறிலங்கனின் சொந்த வானூர்தி தொகுதி மீதான முக்கிய பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்களிலும் அதேபோன்று வாடிக்கையாளர் வானூர்திகளின் பொறியியல் நிகழ்ச்சித்திட்டங்களிலும் மிக வெற்றிகரமான ஆண்டொன்றினைப் பதிவு செய்துள்ளது.

மிக முக்கியமான செயற்றிட்டமாக எமது நீண்ட தூரப் பயண வானூர்தியின் பயணிகள் இருப்பிடம் தரமுயர்த்தப்பட்டமை விளங்கியது. இது பற்றி நான் மேலே விபரமாகக் குறிப்பிட்டுள்ளேன்.

இந்தியாவின் பாரிய குறைந்த கட்டண வானூர்தியான இன்டிகோவுடன் அதன் எயார்பஸ் A320 வானூர்தி தொடர்பான சி-பரிசோதனை பற்றிய முக்கிய பேணலை மேற்கொள்வதற்காக தொடர்ந்து நான்காவது ஆண்டாக ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டதன் மூலம் இப்பிராந்தியத்தில் சிறிலங்கன் என்ஜினியறிங் முக்கியமான பேணல், திருத்தில் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லல் ஆகிய வசதிகளை வழங்குவதில் முக்கியமானதொரு நிறுவனமாக மாறும் அதன் முயற்சிக்கு குறிப்பிடத்தக்கதொரு உந்து சக்தியைப் பெற்றுக் கொண்டது. இன்டிகோ, சிறிலங்கன் என்ஜினியறிங்கிற்கு அனுப்பிய வானூர்திகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 20 இலிருந்து 27 இற்கு அதிகரித்தமை முக்கியமானதொன்றாகும்.

A320 வானூர்திக்கான பழைய நிறுத்துமிடத்தினை பிரத்தியேகமான நிறுத்துமிடமாக நவீனமயப்படுத்தி மாற்றியமைப்பதன் மூலமாக பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திலுள்ள சிறிலங்கன் என்ஜினியறிங்கின் வசதியை உயர்த்துவதற்காக வான் நிறுவனம் குறிப்பிடத்தக்க முதலீடுகளை தொடர்ந்தும் மேற்கொண்டது. இன்று இப்பிராந்தியத்தில் A320 மிக அதிகளவில் பயன்படுத்தப்படுகின்ற வானூர்திகளிலொன்றாக இருப்பதனால் இம்முதலீடுகளிலிருந்து உடனடியாக இலாபம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையினை பிராந்தியத்தின் பேணல், திருத்தல் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லலில் பிராந்திய மையமாக மாற்றுகின்ற அரசாங்கத்தின் தொலைநோக்கில் சிறிலங்கன் என்ஜினியறிங்கும் முக்கியமானதொரு பங்கினை வகிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது, அம்பாந்தோட்டை பன்னாட்டு வானூர்தி நிலையத்திலும் வசதிகளை ஏற்படுத்தும்.

### சிறிலங்கன் எயார் டக்சி

சிறிலங்கன் எயார் டக்சி ஆய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் அதன் உட்கட்டமைப்பு மற்றும் வழித்தட வலையமைப்பு என்பனவற்றில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டியது.

தண்டுகம் ஓயாவில் முக்கியமான வாட்டர் றோமினைத் தொடங்கியமை மிகக் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இது பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து 15 நிமிட தூரத்தில் அமைந்திருப்பதனால் இது ஒப்பீட்டு ரீதியில் பன்னாட்டு பயணிகளுக்குத் தடங்கலற்ற இணைப்புக்களை வழங்கியது.

நாங்களும் சிறிலங்கன் எயார் டக்சி சேவைகளை தம்புள்ளை, திருகோணமலை, இரணமடு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களை அடையும் விதத்தில் விரிவாக்க எதிர்பார்க்கிறோம். அத்துடன் தற்பொழுது சிறிலங்கன் எயார் டக்சி பெரும்பாலும் முழு நாட்டினையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் அதன் வலையமைப்பினை உத்வேகப்படுத்தும்.

### அடிக்கடி பறக்கும் பிளை சிமைல்ஸ் நிகழ்ச்சித்திட்டம்

பிளை சிமைல்ஸ் விரிவாக்கம் - யங்சிமைல்ஸ் தொடக்கி வைக்கப்பட்டதுடன் முன்னணி உலகளாவிய மற்றும் உள்நாட்டு வர்த்தக நாம அடையாளங்களுடனான பங்கேற்பில் நுழைகிறது.

உலகம் முழுவதும் பரந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சேர்ந்து, மீளாய்விற்குரிய ஆண்டில் பிளை சிமைல்ஸ் 'யங்சிமைல்ஸ்' என்ற புதிய துணை நிகழ்ச்சித்திட்டமொன்றினை மேற்கொண்டது. இது 18 வயதிற்குக் குறைந்த சிறுபிள்ளைகளுக்கான உணவு வழங்கலுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டது.

### சிறிலங்கன் தொழில்நுட்பப் பயிற்சி

சிறிலங்கன் தொழில்நுட்பப் பயிற்சி, வானூர்திகள் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் இரண்டிலும் பயிற்சியளிப்பதற்கான ஈரோப்பியன் ஏவியேசன் சேவ்ரி ஏஜன்சியிலிருந்து ஈஏஎஸ்147 ஒப்புதலைப் பெற்ற ஆசியாவிலுள்ள ஒரு சில நிறுவனங்களில் ஒன்றாக இருப்பதுடன் A320, A330 மற்றும் A440 ஆகிய ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த எயார் பஸ் வானூர்தி வகைகளின் பயிற்சியையும் வழங்குகிறது. சிறிலங்கன் தொழில்நுட்பப் பயிற்சியில் வழங்கப்படும் பயிற்சிகள் பாகித்தான், மாலைதீவு மற்றும் இலங்கை உள்ளிட்ட பல நாடுகளினதும் வான் போக்குவரத்து அதிகாரசபைகளினால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகவும் காணப்படுகின்றது.

### சிறிலங்கன் பறப்புக் கல்விக் கல்லூரி

சிறிலங்கன் பறப்புக் கல்விக் கல்லூரி இலங்கையின் மேதகு சனாதிபதியினால் 2011 ஒத்தோபர் 20ஆம் திகதி தொடக்கி வைக்கப்பட்டமையானது வான் நிறுவனத்திற்கும், இப்பிராந்தியத்தில் வான் நிறுவனப் பயிற்சி மையமாக இலங்கையை மாற்றுவதற்குமான முக்கியமானதொரு அபிவிருத்தியாக விளங்கியது.

செயற்றிட்டமானது, சிறிலங்கன் எயார்லையின்சிற்கும் நெதர்லாந்தின் சிம் இன்டஸ்றிஸ் பீவி இற்கும் லொக்கீட் மாா்ட்டின் கம்பனிக்குமிடையிலான பத்து ஆண்டு கூட்டுத் தொழில்முயற்சியொன்றின் பெறுபேறாகும். எயார் பஸ் A320 வானூர்தியின் தொழிற்பாடு தொடர்பாக விமானிகளுக்கு பயிற்சியளிப்பதற்காக சிறிலங்கன் மற்றும் சிம் இன்டஸ்றீஸ் ஆகிய இரண்டினாலும் பறப்பு மாதிரி உருவகப்படுத்தல் இப்பிராந்தியத்தில் சந்தைப்படுத்தப்படும்.

### தொழில்நுட்பம்

பின்னரங்க முடிவு முறைமைகள், கம்பனி வெப்தளம், இணையத்தள ஆசன ஒதுக்கீட்டுப் பொறிமுறை, உலகளாவிய தொடர்பு நிலையம் போன்ற அநேக முன்னேற்றங்களுடன் தொழில்நுட்பத்துறையில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றம் அடையப்பட்டது. இவ்வறிக்கையின் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்விற்குரிய ஆண்டுப் பகுதியில் எமது தகவல் தொழில்நுட்பப் பிரிவு இரு வேறுபட்ட ஐ.எஸ்.ஓ சான்றுபடுத்தல்களைப் பெற்றுக்கொண்டது.

### மக்கள் பயிலுதல் மற்றும் கலாச்சாரம்

வியாபாரக் குறிக்கோள்களுக்கு உதவியளிப்பதற்காக, மனிதவள முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் காத்திரமான முயற்சிகள் மனிதவள நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் புதிய தோற்றமொன்று அளிக்கப்பட்டது. மனிதவள நடவடிக்கைகள் உற்பத்தித்திறனை மேற்கொள்ளுதல் மற்றும் கம்பனி முன்னேற்றங்களில் ஊழியர்களின் பங்கேற்பு என்பனவற்றின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் வியாபாரத்தில் பங்கேற்பதற்கு எண்ணியது. இது தொடர்பான முக்கியமான விடயங்கள் கீழே தரப்படுகின்றன:

- ஒவ்வொரு பிரிவிற்கும் குறிப்பிட்ட வியாபார பங்கேற்புக்களை ஒப்படைப்பதன் மூலம் மனிதவள அபிவிருத்திப் பிரிவினை மீளமைத்தல்.
- ஊழியர்களின் ஆலோசனைகள் மற்றும் யோசனைகள் பெறப்படுகின்றவிடத்து முதன்மை நிறைவேற்று அலுவலர் மற்றும் மூத்த முகாமைத்துவக் குழுவின் பங்கேற்புடன் கேட்டறியும் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் தவறான விளக்கங்களையும் தவறான கருதுகோள்களையும் தவிர்ப்பதற்காகவும் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் கம்பனியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஊழியர்களுடன் கலந்துரையாடப்படுகிறது.
- வருமானத்தினை அதிகரிப்பதற்காகவும் செலவினைச் சிக்கனப்படுத்தி விரயங்களை ஒழிப்பதற்காகவும் ஊழியர்களின் ஆலோசனைகளை கீழ்மட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்காகவும் கூட்டுநாள் மற்றும் உற்பத்தித்திறன் சபையொன்று உருவாக்கப்பட்டது.

- மக்களை மீள்எழுச்சிப்படுத்துவதற்காகவும் அவர்களின் போட்டித்தன்மை பற்றிய உணர்வுகளை மனதில் பதியச் செய்வதற்காகவும் ஒரு சில ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் விளையாட்டுக் கழகம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுத்துகின்றமை மீள எழுச்சிப்படுத்தப்பட்டன.

- எந்தவொரு மட்டத்திலுள்ள அலுவலர்களும் முகாமைத்துவத்தை சந்திப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் அவர்களது மனக் குறைபாடுகளை தெரிவிப்பதற்காகவும் தொடர்பான விடயங்களில் அவர்களின் அபிப்பிராயங்களை சொல்வதற்காகவும் தேவையான வேளைகளில் மாதாந்த மனிதவள கூட்டமொன்று நடாத்தப்பட்டது.

வான் நிறுவனத்தின் பயிற்சித்துறையான சர்வதேச போக்குவரத்துக் கல்லூரி, அடையாளம் காணப்பட்ட பயிற்சி மற்றும் தேவையான அபிவிருத்திகளின் மீது வான் நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் தேர்ச்சியை அதிகரித்தல், அபிவிருத்தி சார்ந்த பயிலுதல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட பயிற்றுவித்தல் என்பனவற்றை முக்கியமாகக் கொண்டு பயிற்சிகளை மேற்கொண்டது.

### சர்வதேச வான் போக்குவரத்துக் கல்லூரி

சர்வதேச போக்குவரத்துக் கல்லூரி “தென்னாசியாவிலுள்ள முதல் பத்து” பயிற்சி நிலையங்களிலொன்றாக அயட்டாவினால் பெயர் குறிக்கப்பட்டதன் மூலம் இலங்கையில் முதலாந்தர பயிற்சி நிறுவனமாக அதன் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது.

சர்வதேச வான் போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கும் மாலைதீவில் அயட்டாவின் பிரத்தியேகப் பயிற்சிப் பங்காளராக விளங்குவதற்கும் பிராந்தியப் பயிற்சி ஏற்பாட்டாளராக அயட்டாவினால் தென்னாசியாவின் முதல் நிறுவனமாக சர்வதேச வான் போக்குவரத்துக் கல்லூரி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச வான் போக்குவரத்துக் கல்லூரி அதன் முதலாவது வெளிநாட்டு அதிகாரம் பெற்ற கிளையினை 2012இல் மாலைதீவில் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

### கம்பனி சமூகப் பொறுப்பாண்மை

சிறிலங்கன் எயார்லையின்ஸ் மற்றும் எமது துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் கம்பனி மட்டத்திலும் தனிப்பட்ட திணைக்கள மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பரந்த வீச்சிலான செயற்றிட்டங்களுடன் அவற்றின் நீண்ட பாரம்பரியம் மிக்க கம்பனி சமூகப் பொறுப்பாண்மையையும் மேற்கொண்டது. இது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- நாடளாவிய ‘செயற்றிட்டமான முன்மாதிரி’ வட மாகாணத்தில் சிறுவர்களுக்கான புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிருமாணிப்பதற்கான உதவியாக ஐ.அ.டொலர் 2 மில்லியன்களைத் திரட்டி அதனை வழங்கியது.

- குருநாகல் மாவட்டத்திலுள்ள முதியவர்களுக்கு விழிப்புல வில்லைகளை அன்பளிப்பாக வழங்கியது.

- எமது துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் ஆண்டியம்பமவிலுள்ள பௌத்த பிரதமிக்க வித்தியாலத்தில் 300 மாணவர்களுக்காக ரூ.7.5 மில்லியன் செலவில் பள்ளிக்கூடக் கட்டடமொன்றினை நிருமாணித்தது.

### எதிர்வரும் ஆண்டுக்கான பொதுவான உபாயம்

வருமானங்களை உருவாக்குவதற்கு பல்வேறு வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் வியாபார அலகுகளை பன்முகப்படுத்திக் கொள்வதற்காகவும் அவற்றின் மூலம் இழப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காகவும் வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதற்காகவும் நாம் பின்வரும் உபாயங்களைப் பின்பற்றுவதற்கு எண்ணுகிறோம்.

- தொழிற்பாட்டுச் செலவுகள் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகவுள்ள ஐரோப்பாவிற்கான இயலளவினை ஒழுங்குமுறைப்படுத்துகின்ற வேளையில் இலாபம் தரும் வழித்தடம்களான மத்திய கிழக்கு, இந்திய துணைக் கண்டம் மற்றும் தூர கிழக்கிற்கான பறப்புக்களையும் இயலளவையும் அதிகரித்தல். இது தற்பொழுது ஐரோப்பா முழுவதிலும் காணப்படும் பொருளாதார நெருக்கடிகளும் அவை ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா மெதுவடைவதற்கு வழிவகுக்கக் கூடியதுமானதொரு பின்னணியில் முன்மதியுடையதொரு நடவடிக்கையாகக் காணப்பட்டது.

- கட்டண அமைப்பில் குறிப்பிட்ட அதிகரிப்புக்களைச் செய்வதன் மூலமும் வருமான முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதனூடாகவும் வருமானத்தினை அதிகரிப்பதில் கவனம் செலுத்துதல்.

- நீண்ட தூரப் பணிகளை வழங்குவதற்குப் போதுமான வானூர்திகளைத் தரமுயர்த்தும் வேலைகள் முடிவடைகையில் எமது தரமுயர்த்தப்பட்ட வியாபார வகுப்புச் சாதனத்தில் உந்துதலை ஏற்படுத்தி வியாபார வகுப்பு விற்பனைகளை உச்சப்படுத்தல்.

- தென் கொரியாவின் சியோலுக்கு புதிய சேவைகளை ஆரம்பித்தல்.

- ஏனைய வான் நிறுவனங்களுடன் குறியீட்டு-பகிர்வு உறவுகளை வலுப்படுத்துவதுடன் நாம் தொழிற்படாத பிராந்தியங்களிலுள்ள கூடுதலான வான் நிறுவனங்களுடன் குறியீட்டுப்-பகிர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதனூடாக எமது உலகளாவிய வழித்தட வலையமைப்பினை விரிவுபடுத்துதல்.

- குறிப்பாக, சிறிய பெறுமதி கூடிய சந்தைகளிலிருந்து இலங்கைக்கு கூடியளவு பயணிகளைக் கவரும் பொருட்டு இலங்கைச் சுற்றுலா, நாட்டின் விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய கைத்தொழில்களுடன் எமது பங்குடமையினை விரிவடையச் செய்தல்.

- பயன்படுத்தப்படாதுள்ள வானூர்தி தரிப்பிடத்தினை புதுப்பிப்பதன் மூலம் பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்திலுள்ள A320 வானூர்திக்கென பிரத்தியேக நிறுத்துமிடத்தில் முதலீடு செய்தல்.

- சிறிலங்கன் என்ஜினியறிங்கினை மற்றைய வானூர்திகளுக்கான மூன்றாந்தரப்பினர்கள் வானூர்திகளையும் பேணும் விதத்தில் விரிவாக்குதல்.

- தற்போதைய இழப்புக்களை ஏற்படுத்தும் தொழிற்பாடுகளை எமது சிறிலங்கன் எயார் டக்சித் தொழிற்பாடுகளுக்கு மாற்றியமைக்கும் விதத்தில் அதற்கு காத்திரமான மாற்றங்களைச் செய்தல்.

- பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்திலும் அம்பாந்தோட்டை சர்வதேச வானூர்தி நிலையத்திலும் வான் நிறுவன விரிவாக்கத்திற்கு உதவும் விதத்தில் அடிப்படை மற்றும் சரக்குக் கையாளல் சாதனங்களிலும் வசதிகளிலும் முதலீடு செய்தல்.

- A330 வானூர்திக்காக இரண்டாவது முழுமையான பறப்பு மாதிரி உருவகப்படுத்தலில் முதலீடு செய்தல். இது விமான ஓட்டிகளுக்கான பயிற்சியை கூடியளவிற்கு பூரணப்படுத்திய சாதனங்களின் சந்தைப்படுத்தலையும் பயிற்சிக்கான சொந்தச் செலவினைக் குறைப்பதனையும் இயலச் செய்யும்.

- சர்வதேச வான் போக்குவரத்துக் கல்லூரியினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அதிகரித்தல்.

- எமது வானூர்திகளுக்குள் இடம்பெறும் சுங்கத் தீர்வையற்ற விற்பனையினை உச்சப்படுத்தல்.

- வருமானத்தினை உச்சப்படுத்துவதற்காக மிகின் லங்காவுடனான எமது பங்குடமையினை வலுப்படுத்தல்.

- உலகளாவிய வான் போக்குவரத்து கைத்தொழிலின் போக்கிற்குச் சமமாக வான் நிறுவனத்தின் முறைமைகளைப் பேணுவதற்கு தொழில்நுட்பத்தில் முதலீடு செய்தல்.

## எதிர்காலத்திற்கான வாய்ப்புக்கள்

மீளாய்விற்குரிய ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் உள்ளீடு செய்யப்பட்ட மூலதனம் கூறப்பட்ட மூலதனத்திலும் பார்க்க நான்கு மடங்கு அதிகரித்த தொகையாக விளங்கியமையும் அடுத்த நான்காண்டு காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட உள்ளீட்டு முதலீடும் எமது வளர்ச்சிக்கு, ஆதரவு வழங்குவதிலும் வலுப்படுத்துவதிலும் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள கடப்பாட்டினை எடுத்துக்காட்டியது.

## தங்களுக்கு நன்றி

மீள் எழுச்சிக்கான இவ்வாண்டு சிறிலங்கன் எயார்லையின்ஸ்சுக்கு இலகுவானதொரு ஆண்டாக இருக்கவில்லையென்பதுடன் தம்மால் இயன்ற அனைத்தையும் மேற்கொண்ட அநேக ஆட்களுக்கும் நிறுவனங்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு சனாதிபதிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் அவர்கள் எமக்களித்த ஆதரவிற்கும் உதவிக்கும் எனது நன்றிகள்.

எமது தலைவருக்கும், சபையிலுள்ள எனது நண்பர்களுக்கும் மூத்த முகாமைத்துவக் குழுவிற்கும் அவர்களது வழிகாட்டலுக்கும் ஆதரவிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

சிறிலங்கன் குடும்பமென கூட்டாக அறியப்படுகின்ற அனைத்து ஊழியர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அவர்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பிற்கும் கடுமையான உழைப்பிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

எங்களுக்குத் துணையாக எங்களுடன் இருந்த பல நிறுவனங்களுக்கும் - இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள எமது நிதியியலாளர்களுக்கும்; இலங்கைச் சுற்றுலா; வானூர்தி நிலைய மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் மற்றும் பண்டாரநாயக்கா வானூர்தி நிலையத்தில் தொழிற்படுகின்ற மற்றைய வான் நிறுவனங்களுக்கும்; எமது வழங்குநர்கள் மற்றும் வியாபாரப் பங்காளர்களுக்கும்; வாடிக்கையாளர்களின் வழிகாட்டல்களே எமது பெறுமானமாக விளங்கும் எல்லாவற்றிற்கும் மேலான எமது வாடிக்கையாளர்களுக்கும் எனது நன்றிகள்.

ஒப்பம்

**கபில சந்திரசேன**
பணிப்பாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
2012 ஓகத்து 17

## பணிப்பாளர்களின் விபரக் குறிப்பு

### நிசாந்த விக்கிரமசிங்க

2006 சனவரியில் சபைக்கு நியமிக்கப்பட்டார். 2008 ஏப்பிறலில் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். 2008 செத்தெம்பரில் பதில் தலைவராக நியமிக்கப்பட்டு 2009 யூலையிலிருந்து தலைவரானார். அவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் மற்றும் மிகின் லங்கா (பிறைவேற்) லிமிடெட்டின் தலைவராகவும் விளங்குவதுடன் உடபுசல்லாவ பிளாண்டேசன் பிஎல்சி மற்றும் கப்புகஸ்தென்ன பிளாண்டேசன் பிஎல்சி என்பனவற்றின் பணிப்பாளருமாவார்.

### கபில சந்திரசேன

2008 திசெம்பரில் சபைக்கு நியமிக்கப்பட்டார். இதற்குப் புறம்பாக 2011 ஓகத்தில் முதன்மை நிறைவேற்று அலுவலராக நியமிக்கப்பட்டார். தொழில்சார் ரீதியில் சந்தைப்படுத்துநரான இவர் தற்பொழுது சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பணிப்பாளராகவும் மிகின் லங்கா (பிறைவேட்) லிமிடெட்டின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் விளங்குகின்றார்.

### நிகால் ஜயமானே ச.ச

1994 - 1998 வரையான காலப்பகுதியில் பணிப்பாளர் சபையிலிருந்த இவர் அதன் பின்னர் 2008 செத்தெம்பரில் மீண்டும் நியமிக்கப்பட்டார். சிரேஷ்ட சனாதிபதி சட்டத்தரணியான இவர் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சட்டத்தரணியாக விளங்கியதுடன் இலங்கை சட்ட ஆணைக்குழுவினதும் கம்பனிச் சட்ட மதியுரை ஆணைக்குழுவினதும் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். இவர் சிறிலங்கன் கேட்டறிங்கினதும் செலான் வங்கி பிஎல்சி இனதும் பணிப்பாளருமாவார்.

### சமீந்திரா ராஜபக்ஷ

2009 ஓகத்தில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தொழில்சார் ரீதியில் கணனிப் பொறியியலாளரான இவர் தற்பொழுது மாண்புமிகு நிதியமைச்சரின் தனிப்பட்ட செயலாளராக பதவி வகிக்கின்றார். இவர் சிறிலங்கன் ரெலிகொம் பிஎல்சி, எஸ்எல்ரி ஹொங்கொங் லிமிடெட், எஸ்எல்ரி பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றின் பணிப்பாளருமாவார்.

### மணிலால் பர்னாந்து

2010 மேயில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் தற்பொழுது கொல்சிம் லங்கா லிமிடெட்டின் தலைவராகப் பணியாற்றுகின்றார். தொழில்சார் ரீதியில் சட்டத்தரணியான இவர் எயிட்கென் ஸ்பென்ஸ் அன்ட் கோ பிஎல்சி, சிலோன் இன்வெஸ்ட்மன் பிஎல்சி மற்றும் சிப்பிங் கார்கோ லொஜிஸ்ரிக் (பிறைவேற்) லிமிடெட் என்பன உட்பட பல்வேறு நிறுவனங்களிலும் பணிப்பாளராக இருந்து வருகின்றார்.

### லக்ஷ்மி சங்கக்காரா

2011 செத்தெம்பரில் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் கணக்காய்வுக் குழுச் சபையின் ஒரு உறுப்பினராகவும் விளங்குகின்றார். தொழில்சார் ரீதியில் சட்டத்தரணியான இவர் பீப்பிள்ஸ் றவல்சின் தலைவராகவும் மக்கள் வங்கியின் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

### சனத் உக்வத்த

2004 - 2008 வரையான காலப்பகுதியிலும் 2008 - 2010 காலப்பகுதியிலும் பணிப்பாளராக இருந்த இவர் அதன் பின்னர் 2011 செத்தெம்பரிலிருந்து இன்று வரை பணிப்பாளராக இருந்து வருகின்றார். தொழில்சார் ரீதியில் சுற்றுலா விடுதியாளரான இவர் தற்பொழுது மவுன்ட்லவனியா ஹோட்டல் குறுாப்பின் தலைவராக இருந்து வருகின்றார். இவர் கணக்காய்வுச் சபை உறுப்பினராகவும் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டில் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

### சுசந்தா ரட்ணாயக்கா

2011 திசெம்பரில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். சபைக் கணக்காய்வுக் குழுவின் தலைவரான இவர் சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் சுதந்திரமான பணிப்பாளருமாவார். இவர் தற்பொழுது ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் பிஎல்சி இன் தலைவராகவும் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றுவதுடன் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் குழுமத்திலுள்ள பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பல கம்பனிகளிலும் பணியாற்றுகின்றார்.

## பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் சபை 2012 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றது.

### பிரதான நடவடிக்கைகளும் வியாபார மீளாய்வும்

கம்பனியின் முக்கியமான வியாபார நடவடிக்கைகள் யாதெனில் பன்னாட்டு தொழிற்பாடுகள், பயணிகள் மற்றும் சரக்குகளைக் கொண்டு செல்வதற்காக பன்னாட்டு, அட்டவணையிடப்பட்ட/ அட்டவணையிடப்படாத வான் சேவைகளையும் அஞ்சல் பணிகளையும் இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட வான் கலம்களின் மூலமாக நடத்துவதேயாகும். கம்பனியின் ஏனைய முக்கிய நடவடிக்கைகளில் பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்தில் வான் முனைக்கோடி சேவைகளை வழங்குதல், வானூர்திகளில் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், நாட்டிற்கு உள்ளேயான மற்றும் வெளியேயான விடுமுறைப் பொதியினைச் சந்தைப்படுத்தல் மற்றும் பயணிகள் போக்குவரத்திற்காக உள்நாட்டு வான் டக்சி சேவைகளைத் தொழிற்படுத்தல் என்பனவும் உள்ளடக்கியிருந்தன. மூன்றாந்தரப்பு பராமரிப்பினை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு சேவைகளுக்கான ஏற்பாடுகள், வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளில் அடங்கியிருந்தன.

இந்நிதியியல் ஆண்டில் கம்பனியின் நடவடிக்கைத் தன்மைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களெதுவும் காணப்படவில்லை.

கம்பனி உள்ளடக்கியிருக்கும் குழுமம் மற்றும் கம்பனிக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றின் முக்கிய நடவடிக்கையாக இலங்கை கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினூடாக தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களிற்கு, அவற்றில் பயணிக்கும் பயணிகளுக்கு உணவு சேவைகளை வழங்குவது காணப்படுகின்றது.

### நிதியியல் கூற்றுக்களும் கணக்காய்வாளர் அறிக்கையும்

2012 மாச்சு 31ஆம் நாள் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் பிரிவின் தலைவரினாலும் பணிப்பாளர்களினாலும் சரியான முறையில் கையொப்பமிடப்பட்ட முழுமையான நிதியியல் கூற்றும் அதற்கான கணக்காய்வாளர் அறிக்கையும் இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதியியல் கூற்றுக்களைக் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் 26 இலிருந்து 38 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### குழுமத்தின் மொத்தப் புரள்வு

குழுமத்தின் மொத்தப் புரள்வு ரூ.92,257 மில்லியன்களாகக் (2010/11இல் ரூ.78,515 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் மொத்தப் புரள்வு தொடர்பான விபரமானதொரு பகுப்பாய்வு நிதியியல் கூற்றின் குறிப்பு 17இல் தரப்பட்டுள்ளது.

கம்பனிக்கும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டிற்குமிடையிலான கொடுக்கல்வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

### பெறுபேறுகள்

வரி விதிப்பிற்பு முன்னரான குழுமத்தின் பெறுபேறு ரூ.17,161 மில்லியன் (2010/11: குழுமத்தின் பற்றாக்குறை ரூ.177 மில்லியன்) கொண்ட பற்றாக்குறையாகக் காணப்பட்டது. வரி விதிப்பிற்கான ரூ.11 மில்லியன் கொண்ட சீராக்கத்தின் பின்னர் (2010/11: ரூ.26 மில்லியன்) குழுமத்தின் இவ்வாண்டிற்கான பெறுபேறு ரூ.17,172 மில்லியன் கொண்ட பற்றாக்குறையாகக் காணப்பட்டது. (2010/11இற்கான குழுமத்தின் பற்றாக்குறை ரூ.202 மில்லியன்களாகும்).

இவ்வாண்டிற்கான ஒன்று திரட்டப்பட்ட வருமானக் கூற்று 23ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

### குழுமத்தின் முதலீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான இவ்வாண்டிற்குரிய குழுமத்தின் மூலதனச் செலவினம் ரூ.2,692 மில்லியனாகக் (2010/11: ரூ.909 மில்லியன்) காணப்பட்டது.

### சொத்து, பொறி மற்றும் சாதனம்

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு குழுமத்தின் சொத்து, பொறி மற்றும் சாதனத்தின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூ.7,238 மில்லியன்களாகக் (2010/11: ரூ.4,648 மில்லியன்) காணப்பட்டது. சொத்து, பொறி மற்றும் சாதனம் மற்றும் அவற்றின் அசைவுகளின் விபரங்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 3இல் தரப்பட்டுள்ளது.

### கூறப்பட்ட மூலதனம்

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூ.19,433 மில்லியனாக (2010/11: ரூ.5,146 மில்லியன்) காணப்பட்டது.

இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை அரசாங்கம் திறைசேரி முறிகள் வடிவில் ரூ.14,286 மில்லியன்களை முதலீடு செய்தது. பங்குடமையாளர்களின் ஒப்புதலுக்குட்பட்டு பணிப்பாளர் சபை பங்கு உரிமைகள் வடிவில் சாதாரண பங்குகளை வழங்குவதற்கு அதிகாரமளித்தது. இப்பங்குகளை வழங்குவதற்கான பங்குடமையாளர்களின் ஒப்புதல் அடுத்து வரும் நிதியியல் ஆண்டின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

### ஒதுக்குகள்

2012 மாச்சு 31ஆம் திகதியிலுள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்குகள் ரூ.15,279 மில்லியனாக (2010/11: ரூ.1,156 மில்லியன்) காணப்பட்டது. இது, ரூ.17,856 மில்லியன் கொண்ட ஒன்று சேர்ந்த இழப்புக்கள், (2010/11: ரூ.684 மில்லியன்) ரூ.2,523 மில்லியன் (2010/11: ரூ.1,786 மில்லியன்) கொண்ட மூலதன ஒதுக்கங்கள் ரூ.0.63 மில்லியன் கொண்ட வருமான ஒதுக்கங்கள் (2010/11: ரூ.0.63 மில்லியன்) மற்றும் ரூ.53 மில்லியன் கொண்ட பொதுவான ஒதுக்கங்கள் (2010/11: ரூ.53 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்வொதுக்கங்களின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்களிலுள்ள பங்குகளில் காணப்படும் மாற்றங்களினது கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### கம்பனி நன்கொடைகள்

குழுமம் இவ்வாண்டில் எந்தவொரு காசு நன்கொடையினையும் மேற்கொள்ளவில்லை. அரசியல் நோக்கங்களுக்காக எவ்வித கொடைகளும் வழங்கப்படவில்லை.

### வரி விதிப்பு

இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி, கம்பனி 2013 மாச்சு 31ஆம் நாள் வரை வரி விடுப்பினை அனுபவிக்கலாம். 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2021 மாச்சு 31ஆம் நாள் வரை கம்பனி அதன் அனைத்து வியாபார நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

தற்பொழுது இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் கம்பனி மேற்கொள்ளும் கடல் கடந்த தொழிற்பாடுகளின் மீது வரி செலுத்துவதற்கு கம்பனி பொறுப்புடையதாகும்.

முழுமையாகச் சொந்தமான துணைக் கம்பனியான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினைப் பொறுத்தவரை, இலங்கை முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் நியதிகளின்படி விமானங்களின் சமயலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகங்களிலிருந்து கிடைத்த வருமானத்திற்கு 2006 யூலை 1ஆம் நாளிலிருந்து 2021 மே 31ஆம் நாள் வரை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மற்றைய மூலங்களிலிருந்து கிடைத்த வருமானம் தற்போது நிலவும் வரி வீதங்களில் வரி செலுத்துவதற்குட்பட்டதாகும்.

### பங்குத் தகவல்கள்

2012 மாச்சு 31இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் வருமாறு:

| பங்குடமைகள் | பங்குகளின் எண்ணிக்கை | உடமைகளின் விகிதம் |
|---|---|---|
| இலங்கை அரசு | 26,275,436 | 51.06% |
| இலங்கை வங்கி | 12,115,570 | 23.54% |
| மக்கள் வங்கி | 4,236,135 | 8.23% |
| தேசிய சேமிப்பு வங்கி | 4,236,135 | 8.23% |
| ஊழியர் சேம நிதியம் | 1,863,676 | 3.62% |
| ஏனையவை | 2,736,511 | 5.32% |

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பங்கு மூலதனங்களுக்கான ரூ.14.3 பில்லியன் முற்பணத்தினை மேலேயுள்ள பங்குத் தகவல்கள் உள்ளடக்கவில்லை.

### எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

2012 மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான எதிர்பாராத பொறுப்புக்களும் அந்த நாளன்று உள்ளவாறான மூலதனச் செலவினத்தில் செய்யப்பட்ட கடப்பாடுகளும் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 24இல் தரப்பட்டுள்ளன.

### ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்களுக்கான 26ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தவிர சீராக்கத்தினை அல்லது வெளிப்படுத்துகையினைத் தேவைப்படுத்துகின்ற எந்தவொரு நிலைமையும் ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் ஏற்படவில்லை.

### தொழில்நிலைக் கொள்கைகள்

தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் குழுமத்தின் தொழில்நிலைக் கொள்கையானது பால், இனம் அல்லது சமயம் என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குவதேயாகும். தொழில் ரீதியான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள்

கணிசமானளவு கவனத்தினைப் பெற்றுள்ளன. ஆண்டின் இறுதியில் கம்பனியினாலும் அதன் துணை நிறுவனத்தினாலும் தொழில் வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை 6,367 ஆகக் காணப்பட்டது (2010/11: 5,659 ஆகக் காணப்பட்டது).

### சட்ட ரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கை என்பனவற்றின்படி ஊழியர்கள் மற்றும் இலங்கை அரசாங்கம் தொடர்பான அனைத்துச் சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் நாளது வரை சரியான முறையில் செலுத்தப்பட்டிருக்கின்றன என திருப்திபடுகின்றனர்.

### சுற்றாடல் பாதுகாப்பு

குழுமத்தின் வியாபார நடவடிக்கைகள் சுற்றாடலின் மீது நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கங்களை கொண்டிருக்க முடியும். சுற்றாடலின் மீதான மோசமான தாக்கத்தினை இயன்றவரை குறைப்பதும் தொடர்பான அதிகாரசபைகளுடனான ஒத்துழைப்பினை ஊக்குவித்து ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடப்பதுமே குழுமத்தின் கொள்கையாகவுள்ளது.

### கம்பனி ஆளுகை/ உள்ளகக் கட்டுப்பாடு

இன்றைய கம்பனி உலகில் சிறந்த ஆளுகை நடைமுறைகளைப் பின்பற்றுவது மிக இன்றியமையாததொரு தேவைப்பாடாக மாறியிருக்கிறது.

பணிப்பாளர்கள், குழும முறைமையின் உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கான அவர்களின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். முறைமையானது உத்தரவாதங்களை வழங்குதல், மற்றைய விடயங்கள், சொத்துக்களின் மீதான பாதுகாப்பு, சரியான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் தயாரிக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் நம்பகத்தன்மை என்பனவற்றை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், எந்தவொரு முறைமையும் நியாயமான அளவிற்கு மாத்திரமே உத்தரவாதத்தினைக் கொண்டிருக்க முடியுமேயன்றி முழுமையான உத்தரவாதத்தினை கொண்டிருக்க முடியாது. தவறுகளும் ஒழுங்கீனங்களும் நியாயமானதொரு காலப்பகுதிக்குள் தடுக்கப்படுகின்றன அல்லது கண்டுபிடிக்கப்படுகின்றன. கணக்காய்வுக் குழுச் சபையின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் ஒரு பகுதியாக தரப்பட்டுள்ளது.

நிதியியல் கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்ட நாளது வரையான காலப்பகுதியில் உள்ளகக் கட்டுப்பாடு முறைமை காத்திரமான முறையில் தொழிற்பட்டமையையிட்டு சபை திருப்தியடைந்திருக்கிறது.

### தொடர்ந்து செல்லும் கரிசனைகள்

பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றில் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையினைப் பின்பற்றியிருக்கின்றனர்.

### பணிப்பாளர் சபை - தற்போதையது

கம்பனியின் தற்போதைய பணிப்பாளர் சபை கீழே தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திரு. நிஷாந்த விக்கிரமசிங்க | - | தலைவர் |
| திரு. நிஹால் ஜயமான ச.ச. | - | பணிப்பாளர் |
| திரு. கபில சந்திரசேன | - | பணிப்பாளர் |
| திரு. சமீந்திர ராஜபக்ஷ | - | பணிப்பாளர் |
| திரு. மணிலால் பர்னாந்து | - | பணிப்பாளர் |
| திருமதி. லக்ஷ்மி சங்கக்காரா | - | பணிப்பாளர் |
| திரு. சனத் உக்வத்த | - | பணிப்பாளர் |
| திரு. சுசந்த ரட்ணாயக்கா | - | பணிப்பாளர் |

2011 ஏப்பிறல் 01இல் பணிப்பாளராக இருந்த வைத்திய கலாநிதி கிறிஸ் நோனிஸ் 2011 செத்தெம்பர் 29ஆம் நாள் பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்நிதியாண்டுப் பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டு சபைக்கு நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| திருமதி. லக்ஷ்மி சங்கக்கார | - | 2011 செத்தெம்பர் 01 |
| திரு. சனத் உக்வத்த | - | 2011 செத்தெம்பர் 29 |
| செல்வி. டபிள்யு ஏ நாளனி | - | 2011 ஒத்தோபர் 14 |
| திரு. சுசந்த ரட்ணாயக்கா | - | 2011 திசெம்பர் 20 |

செல்வி டபிள்யு ஏ நாளனி 2012 யூலை 4 தொடக்கம் பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமாச் செய்தார்.

**பணிப்பாளர் சபை - சிறிலங்கன் கேட்டறிங்**

சிறிலங்கன் கேட்டறிங்கின் தற்போதைய பணிப்பாளர் சபை வருமாறு:

| | | |
|---|---|---|
| திரு. நிஷாந்த விக்கிரமசிங்க | - | தலைவர் |
| திரு. நிஹால் ஜயமான ச.ச. | - | பணிப்பாளர் |
| திரு. சமீந்திர ராஜபக்ஷ | - | பணிப்பாளர் |
| திரு. கபில சந்திரசேன | - | பணிப்பாளர் |
| * திரு. சுசந்த ரட்ணாயக்கா | - | பணிப்பாளர் |
| * முனைவர் நாலக கொடகேவா | - | பணிப்பாளர் |
| திரு. சனத் உக்வத்த | - | பணிப்பாளர் |

* சுதந்திரமான பணிப்பாளர்கள்

2011 ஏப்பிறல் 01இல் பணிப்பாளராக இருந்த வைத்திய கலாநிதி கிறிஸ் நோனிஸ் 2011 செத்தெம்பர் 29ஆம் நாளன்று பணிப்பாளர் சபையிலிருந்து இராஜினாமாச் செய்தார். திரு சனத் உக்வத்த 2011 நவெம்பர் 28ஆம் நாளன்று சிறிலங்கன் கேட்டறிங் இன் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார்.

**பணிப்பாளர்களின் ஊதியம்**

பணிப்பாளர்கள், 2012 மாச்சு 31 உடன் முடிவடைந்த ஆண்டுக் காலப்பகுதியில் ஏதேனும் வருமானத்தினையோ அத்துடன்/ அல்லது சபையின் கூட்டங்களில் பங்குபற்றியமைக்காக/ கலந்து கொண்டமைக்காக கொடுப்பனவுகளில் உள்ளடக்குகின்ற வேறு ஏதேனும் கொடுப்பனவுகளையோ பெற்றிருக்கவில்லை. பணிப்பாளர்கள் கடமையின் நிமித்தம் வெளிநாட்டிற்கு செல்லுமாறு கேட்கப்படின் அவர்கள் நாளொன்றிற்கான நாளாந்தப்படி, சுற்றுலா விடுதி, போக்குவரத்து வசதிகளைப் பெற உரித்துடையவராவர். பணிப்பாளர்கள், அவர்களது வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருக்கும் பிள்ளைகள் ஆகியோர் சிறிலங்கன் எயார்லையின்சின் வர்த்தக வகுப்பில், அவர்கள் பதவியிலிருக்கும் காலப்பகுதியில் கட்டணமெதுவுமின்றி பயணம் செய்ய உரித்துடையவராவர்.

**பணிப்பாளர்களின் பங்குடமைகள்**

அலுவலக அதிகாரங்களின்படி இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் உட்பட இரண்டு பணிப்பாளர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்திருக்கின்றனர்.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலவுரித்துக்கள்**

பணிப்பாளர்கள் கம்பனியுடனான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களிலோ அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒப்பந்தங்களிலோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எவ்வித நலவுரித்துக்களையும் கொண்டிருக்கவில்லை.

**ஆண்டுப் பொதுக்கூட்டம்**

ஆண்டுப் பொதுக்கூட்டம் 2012 செத்தெம்பர் 24ஆம் நாளன்று நடத்தப்படும்.

**கணக்காய்வாளர்கள்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச் சட்டத்திற்கிணங்க திருவாளர்கள் ஏர்ணஸ்ட் அன்ட் யங் பட்டயக் கணக்காளர்களை கம்பனியின் கணக்காய்வாளர்களாக மீண்டும் நியமிக்கும் பிரேரணையொன்று ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 20இல் தரப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் (ஒரு கணக்காய்வாளர் தவிர) கம்பனியுடனோ அல்லது துணைக் கம்பனியுடனோ எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

**சபையின் கட்டளைப்படி**

ஒப்பம்

**மில்ட்ரெட் பீரிஸ்**
கம்பனி செயலாளர்

ஒப்பம் ஒப்பம்

பணிப்பாளர் பணிப்பாளர்

2012 ஓகத்து 17

**பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள்**

கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைகள், பக்கம் 21இல் காணப்படும் கணக்காய்வாளர்களின் பொறுப்புக்களிலிருந்தும் வேறுபடுகின்றன.

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறு கம்பனியினதும் குழுமத்தினதும் விவகாரங்கள் தொடர்பான நோக்கில் உண்மையானதும் நியாயமானதுமான அம்சங்கள் ஒவ்வொரு நிதியாண்டும் வழங்குகின்ற விதத்தில் நிதியியல் கூற்றுக்களையும் நிதியாண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் இலாப அல்லது நட்டக் கணக்கினைத் தயாரிக்க வேண்டும் என தேவைப்படுத்துகின்றது. நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுவதுடன் நியாயமானதும் முன்மதியுடையதுமான தீர்ப்புக்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படுவதுடன் ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டிருக்கின்றன.

நிதியியல் கூற்றுக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்கவும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்கும் விதத்திலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் நிலைமையினை நியாயமான துல்லியத்துடன் வெளிப்படுத்தக்கூடிய விதத்தில் கம்பனியும் அதன் துணை நிறுவனமும் போதுமான கணக்கீட்டு பதிவேடுகளைப் பேணுகின்றமையை உறுதிப்படுத்துவது பணிப்பாளர்களின் பொறுப்பாக இருக்கின்றது. குழுமத்தின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்காக நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அத்தகைய கருத்திற்கிணங்க மோசடி மற்றும் ஏனைய ஒழுங்கீனங்களை தடைசெய்தல் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பொருத்தமான முறைமைகளை நிறுவுவது தொடர்பாக பொருத்தமான தன்மைகளை பேணுவதற்கும் அவர்கள் பொறுப்பாக இருக்கின்றனர்.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது பணிப்பாளர்கள் தொடர்ந்து செல்லும் கரிசனை அடிப்படையினைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். குழுமமானது தொடர்ந்தும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் போதுமான மூலவளங்களைக் கொண்டுள்ளது என்பதனை பரிசீலனையில் கொள்ளும் விதத்தில் காசுப்பாய்ச்சல்கள் மற்றும் கடன்பாட்டு வசதிகள் உட்பட 2012 மாச்சு 31இல் முடிவடைகின்ற நிதியாண்டிற்கான குழுமத்தின் வரவு செலவுத்திட்டம் பற்றி பணிப்பாளர்கள் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அதன் மீளாய்வினை ஆராய்ந்தனர்.

கண்காய்வாளர்கள் நிதியியல் கூற்றுக்கள் பற்றிய அவர்களது கருத்தினை உருவாக்குவதற்கு இயலச் செய்வதற்கு எவை பொருத்தமானது என அவர்கள் கருதினார்களோ அவை எதுவாக இருப்பினும் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டிருந்தனர்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவுக்கெட்டிய வரையில், ஐந்தொகையின் திகதியிலுள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் அனைத்தும் நிதியியல் கூற்றுக்களின் பொருட்டு போதுமான விதத்தில் செலுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றனர்.

சபையின் கட்டளைப்படி

ஒப்பம்

**மில்ட்ரெட் பீரிஸ்**
கம்பனி செயலாளர்
2012 ஓகத்து 17

## சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### உறுப்பினர்கள்

2011 ஏப்பிறல் 01ஆம் நாளன்று சிறிலங்கன் எயார்லையின்ஸின் சபைக் கணக்காய்வுக் குழு திரு. நிஹால் ஜயமான ச.ச. அவர்களையும் (தலைவர்) பணிப்பாளர் வைத்திய கலாநிதி கிறிஸ் நோனிஸ் அவர்களையும் சுதந்திரமான அவதானிப்பாளராக பட்டயக் கணக்காளரான திரு. லலித் வித்தானாவையும் உள்ளடக்கியிருந்தது.

2011 ஓகத்து 12 இலிருந்து வான் போக்குவரத்து அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் திரு எஸ்.எம். சந்திரபாலா சுதந்திரமான பணிப்பாளராக தொழிற்பட்டார்.

பதவியிலிருந்த தலைவர் திரு. நிஹால் ஜயமான ச.ச. மருத்துவ விடுப்பில் சென்றமை, 2011 செத்தெம்பர் 29ஆம் நாள் வைத்திய கலாநிதி செறிஸ் நோனிஸ் இராஜினாமச் செய்தமை என்பன காரணமாக 2012 பெப்புருவரி 29ஆம் நாளன்று நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கணக்காய்வுக் குழுச் சபையினை மீளவமைப்பதற்கும் திரு சுசந்த ரட்ணாயக்கா, திருமதி லக்ஷ்மி சங்கக்காரா மற்றும் திரு. சனத் உக்வத்தை ஆகியோரை நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்களாக நியமிப்பதற்கும் ஒப்புதலளித்தது. திரு. சுசந்த ரட்ணாயக்கா/ சபைக் கணக்காய்வுக் குழுவின் தற்காலிகத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

### வகிபாகமும் பொறுப்புக்களும்

சபைக் கணக்காய்வுக் குழுவின் முக்கியமான தொழிற்பாடு யாதெனில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள், நிதியியல் அறிக்கையிடும் செயன்முறைகள், இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறைகள், ஆளுகை, கணக்காய்வு செயன்முறை மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் ஒழுக்கக்கோவைக்கும் இணங்கியொழுகுவதனைக் கண்காணிப்பதற்கான கம்பனியின் செயன்முறைகள் என்பனவற்றை மேற்பார்வை செய்யும் கம்பனிப் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களை நிறைவேற்ற அவர்களுக்கு உதவுவதேயாகும்.

சபையின் கணக்காய்வுக் குழுவின் பொறுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன;

- தகவல் முறைமை/ தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகள் உட்பட உள்ளகக் கட்டுப்பாடுகளின் தொழிற்பாடுகளையும் செயன்முறைகளையும் மீளாய்வு செய்தல்
- முகாமைத்துவம், ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபைகள் மற்றும் பங்குடமையாளர்களுக்கு துல்லியமானதும் பொருத்தமானதுமான தகவல்களை சரியான நேரத்தில் வழங்கும் பொருட்டு நிதியியல் அறிக்கையிடும் முறைமையினை மீளாய்வு செய்தல்
- வியாபார இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ செயன்முறைகளைக் கண்காணித்தல்
- முக்கியமான நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள், கம்பனிக்கொள்கைகள் மற்றும் கைத்தொழிலின் சிறந்த நடைமுறைகள் என்பனவற்றிற்கு குழுமம் இணங்கியொழுகுகின்றமை பற்றி மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்
- உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகளின் முகாமைத்துவத்தினை மீளாய்வு செய்தல்
- வெளிக் கணக்காய்வாளரின் சுதந்திரமான தன்மை பற்றி மீளாய்வு செய்தல்

### கூட்டங்கள்

சபையின் கணக்காய்வுக் குழு 2012 மாச்சு 31இல் முடிவடைந்த நிதியாண்டுப் பகுதியில் 2 கூட்டங்களை நடத்தியது. குறிப்பிட்ட விடயங்களின் மீது சபையின் கணக்காய்வுக் குழு நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி விளக்குவதற்காக அழைப்பின் பேரில் மேற்குறிப்பிட்ட கூட்டங்களில் முகாமைத்துவ உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### குழும உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகள்

சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு குழும உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகள் (முன்னர் குழும உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு என அறியப்பட்டது) பலமாக ஆதரவளித்தது. குழும உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகளின் மூத்த முகாமையாளர் கணக்காய்வுக் குழுவிற்கு நேரடியாக அறிக்கையளிப்பார். மூத்த முகாமைத்துவக் குழு உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகளினால் அவதானிக்கப்பட்ட முக்கிய உபாய மற்றும் கட்டுப்பாட்டுப் பிரச்சனைகள் குழும உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகளின் மூத்த முகாமையாளரால் சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு அறிவிக்கப்படும்.

கணக்காய்வுக் குழு உத்தரவாத மற்றும் மதியுரைப் பணிகள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு வேலைகள் தொடர்பான முன்னேற்றங்களை மீளாய்வு செய்ததுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை எப்பொழுது, எவ்வாறு வலுப்படுத்த வேண்டும் என்பது பற்றிய விதந்துரைப்புக்களை மேற்கொண்டது.

**வெளியகக் கணக்காய்வு**

இவ்வாண்டுப் பகுதியில், சபையின் கணக்காய்வுக் குழு கணக்காய்வாளரின் அறிக்கை தொடர்பாகவும் அவர்களினால் வழங்கப்பட்ட முகாமைத்துவக் கடிதம் பற்றியும் கலந்துரையாடுவதற்காக வெளியகக் கணக்காய்வாளரினைச் சந்தித்தது.

ஒப்பம்

**சுசந்த ரட்ணாயக்கா**
தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு
2012 ஓகத்து 16

ERNST & YOUNG

Chartered Accountants
201 De Saram Place
P.O. Box 101
Colombo 10
Sri Lanka
Tel : (0) 11 2463500
Fax Gen : (0) 11 2697369
Tax : (0) 11 5578180
eysl@lk.ey.com

## சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டின் பங்குடமையாளர்களுக்கான சுதந்திரமான கணக்காய்வாளர் அறிக்கை

### நிதியியல் கூற்றுக்கள் மீதான அறிக்கை

கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் ஒன்று திரட்டிய நிதியியல் கூற்றுக்களைக் கொண்ட சிறிலங்கன் எயார்லையின்ஸ்சின் (கம்பனி) ஒன்று சேர்ந்த நிதியியல் கூற்றுக்களை நாங்கள் கணக்காய்வு செய்திருக்கிறோம். இது 2012 மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான கம்பனியின் ஐந்தொகை, வருமானக்கூற்று, அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மூலதனங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்றுக்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு, ஏனைய விளக்க குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

### நிதியியல் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கையின் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிப்பதற்கும் நியாய பூர்வமாக சமர்ப்பிப்பதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க பாதிப்புக்கள் தொடர்பாக பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையைத் தெரிவு செய்தல் மற்றும் பிரயோகித்தல், சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பன இப்பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

### கணக்காய்விற்கான நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

எமது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எமது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நாம் இக்கணக்காய்வினை மேற்கொண்டோம். இந்நிதிக்கூற்றுக்கள் பாரிய தவறுகளைக் கொண்டிருக்கவில்லை என்பது தொடர்பாக நியாயமாக உறுதிப்படுத்தக் கூடியவாறு கணக்காய்வினை திட்டமிட்டு செயற்படுத்துவது இந்நியமத்தின் பிரகாரம் அவசியமானதாகவுள்ளது.

கணக்காய்வொன்று பரீட்சிப்பு, பரீட்சை அடிப்படை, நிதியியல் கூற்றுக்களிலுள்ள தொகைகள், வெளிப்படுத்தல்கள் என்பன தொடர்பான சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்குகிறது. கணக்காய்வு பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளின் மதிப்பிடல், முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் அதேபோன்று ஒட்டுமொத்த நிதியியல்கூற்று முன்வைத்தலின் மதிப்பீடு என்பனவற்றையும் உள்ளடக்குகிறது.

எமது சிறந்த அறிவிற்கெட்டிய வரையில் நாம் கணக்காய்வு நோக்கங்களுக்கு அவை அவசியமானவை எனவும் நம்பும் அனைத்து தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றிருக்கின்றோம். ஆகவே, எமது அபிப்பிராயத்திற்கான போதுமான அடிப்படையினை எமது கணக்காய்வு வழங்குகிறது என நம்புகிறோம்.

### அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தின்படி, எமது பரீட்சிப்புக்களிலிருந்து இதுவரை காணப்பட்டவற்றின்படி, 2012 மாச்சு 31 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக கம்பனி சரியான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணி இருப்பதுடன், நிதியியல்கூற்றுக்கள், 2012 மாச்சு 31இல் உள்ளவாறான, உண்மையான தன்மையினையும் கம்பனியினது அலுவல்களின் நிலையினது நியாயமான நோக்கினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான இழப்புக்களையும் காசுப்பாய்ச்சல்களையும் தருகின்றன.

எமது அபிப்பிராயத்தின்படி, திரட்டிய நிதியியல்கூற்றுக்கள் 2012 மாச்சு 31இல் உள்ளவாறான அலுவல்களது நிலையின் உண்மையானதும் நியாயமானதுமான நோக்கொன்றினைத் தருவதுடன் இதுவரை கம்பனியின் பங்குடமையாளர்களைப் பொறுத்தவரையில், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க கம்பனியினதும் அதனுடன் தொடர்பான துணை நிறுவனத்தினதும் அப்போது முடிவடைந்த ஆண்டிற்கான இழப்புக்களையும் காசுப்பாய்ச்சலையும் தருகின்றது.

எமது அபிப்பிராயத்தினை உறுதிப்படுத்தாமல் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ள குறிப்பு 2.1.2 இற்கு கவனத்தினை ஈர்க்கின்றோம்.

### மற்றைய சட்டம் மற்றும் தேவைப்பாடுகளின் மீதான அறிக்கை

எமது அபிப்பிராயத்தின்படி இந்நிதியியல்கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 151(2) மற்றும் 153(2) இலிருந்து 153(7) வரையான பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுகின்றன.

ஒப்பம்

ஏர்னஸ்ட் அன்ட் ஐங்
பட்டயக் கணக்காளர்கள்
2012 ஓகத்து 17
கொழும்பு

ஐந்தொகை

2012 மாச்சு 31இல் உள்ளவாறு

| | குறிப்பு | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| சொத்து, பொறி மற்றும் சாதனம் | 3 | 7,238.43 | 4,647.69 | 5,316.64 | 2,558.82 |
| முக்கிய திருத்தல், வானூர்தி எந்திரங்களின் தரமுயர்த்தல் | 4 | 6,684.88 | 6,080.36 | 6,684.88 | 6,080.36 |
| வானூர்தி பேணல் ஒதுக்கு | 5 | 15,372.86 | 8,849.84 | 15,372.86 | 8,849.84 |
| வானூர்தி மற்றும் உதிரிப் பாகங்கள் எந்திர வைப்புக்கள் | | 3,131.57 | 2,156.38 | 3,131.57 | 2,156.38 |
| அருவச் சொத்து | 6 | 56.11 | 111.69 | 55.77 | 110.07 |
| முதலீடுகள் | 7 | 14,232.17 | 65.36 | 14,274.21 | 107.40 |
| | | 46,716.02 | 21,911.32 | 44,835.93 | 19,862.87 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 8 | 4,513.76 | 4,490.19 | 4,232.38 | 4,259.99 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | 9 | 13,897.30 | 10,553.71 | 13,160.92 | 10,055.27 |
| வானூர்தி பேணல் ஒதுக்குகள் | 5 | 2,608.50 | 2,506.16 | 2,608.50 | 2,506.16 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 10 | 2,027.65 | 1,757.24 | 1,733.32 | 1,455.17 |
| | | 23,047.21 | 19,307.30 | 21,735.12 | 18,276.59 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 69,763.23 | 41,218.62 | 66,571.05 | 38,139.46 |
| **பங்கு மூலதனம் மற்றும் இலாபங்கள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11 | 19,432.67 | 5,146.35 | 19,432.67 | 5,146.35 |
| ஒதுக்குகள் | 12 | 2,576.72 | 1,840.05 | 1,905.01 | 1,168.34 |
| ஒன்றுசேர்ந்த இழப்பு | | (17,855.84) | (683.85) | (22,776.58) | (3,097.87) |
| **மொத்தப் பங்கு மூலதனம்** | | 4,153.55 | 6,302.55 | (1,438.90) | 3,216.82 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 13 | 1,000.00 | 1,000.00 | - | - |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 3,752.26 | 1,824.63 | 4,788.03 | 2,914.21 |
| ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 15 | 5,232.48 | 4,211.97 | 4,962.06 | 3,990.46 |
| | | 9,984.74 | 7,036.60 | 9,750.09 | 6,904.67 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டியவை | 16 | 46,211.85 | 21,006.09 | 48,667.33 | 21,482.97 |
| செலுத்தத்தக்க வருமான வரி | | 211.03 | 204.98 | 175.45 | 175.45 |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 14 | 9,202.06 | 6,668.40 | 9,417.08 | 6,359.55 |
| | | 55,624.94 | 27,879.47 | 58,259.86 | 28,017.97 |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | 69,763.23 | 41,218.62 | 66,571.05 | 38,139.46 |

இந்நிதியியல்கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்
நிதித் தலைவர்

இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாக இருக்கின்றது. சபைக்காவும் சபையின் சார்பாகவும் பின்வருவோரினால் ஒப்பிடமிடப்படுகின்றது.

ஒப்பம்
பணிப்பாளர்

ஒப்பம்
பணிப்பாளர்

26ஆம் பக்கத்திலிருந்து 54ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

கொழும்பு
2012 ஓகத்து 17

வருமானக்கூற்று
2012 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| | குறிப்பு | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 17 | 92,257.04 | 78,515.24 | 90,544.22 | 77,125.45 |
| விற்பனைக் கிரயம் | | (97,946.07) | (71,995.59) | (99,395.48) | (73,187.54) |
| மொத்த (இழப்பு)/ இலாபம் | | (5,689.03) | 6,519.65 | (8,851.26) | 3,937.91 |
| ஏனைய வருமானம் மற்றும் நன்மைகள் | 18 | 1,196.66 | 3,661.84 | 421.70 | 4,489.25 |
| விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முறை | | (7,479.93) | (6,329.48) | (7,479.93) | (6,329.48) |
| நிருவாகச் செலவுகள் | | (3,751.00) | (3,244.48) | (2,501.41) | (1,817.32) |
| நிதிச் செலவு | 19.1 | (1,642.30) | (831.89) | (1,462.20) | (671.48) |
| நிதி வருமானம் | 19.2 | 204.56 | 47.62 | 197.68 | 13.37 |
| **வரிக்கு முன்னைய இழப்பு** | 20 | (17,161.04) | (176.74) | (19,675.42) | (377.75) |
| வருமான வரிச் செலவு | 21 | (10.95) | (25.58) | (3.29) | (3.86) |
| **ஆண்டிற்கான இழப்பு** | | (17,171.99) | (202.32) | (19,678.71) | (381.61) |
| பங்கொன்றிற்கான அடிப்படை வருவாய் (ரூ.) | 22 | (333.67) | (3.93) | (382.38) | (7.42) |

26ஆம் பக்கத்திலிருந்து 54ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

கொழும்பு
2012 ஓகத்து 17

| குழுமம் | குறிப்பு | செலுத்தப் பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கு | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இலாபம்/ இழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2010 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,114.27 | 0.63 | 53.44 | 518.47 | 6,833.16 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு மீதான மிகை | 12.1 | - | 671.71 | - | - | - | 671.71 |
| முன்னுரிமைப் பங்குகளின் வழங்கல் - 10 ஆண்டில் மாற்றத்தக்கவை | 13 | - | - | - | - | (1,000.00) | (1,000.00) |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | (202.32) | (202.32) |
| **2011 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,785.98 | 0.63 | 53.44 | (683.85) | 6,302.55 |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 14,286.32 | - | - | - | - | 14,286.32 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு மீதான மிகை | 12.1 | - | 736.67 | - | - | - | 736.67 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | (17,171.99) | (17,171.99) |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | | 19,432.67 | 2,522.65 | 0.63 | 53.44 | (17,855.84) | 4,153.55 |

| கம்பனி | குறிப்பு | செலுத்தப் பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கு | வருமான ஒதுக்கு | பொது ஒதுக்கு | ஒன்றுசேர்ந்த இலாபம்/ இழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **2010 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,114.27 | 0.63 | 53.44 | (2,716.26) | 3,598.43 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | (381.61) | (381.61) |
| **2011 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | | 5,146.35 | 1,114.27 | 0.63 | 53.44 | (3,097.87) | 3,216.82 |
| பங்கு மூலதனத்திற்கான முற்பணம் | 11 | 14,286.32 | - | - | - | - | 14,286.32 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு மீதான மிகை | 12.1 | - | 736.67 | - | - | - | 736.67 |
| ஆண்டிற்கான இழப்பு | | - | - | - | - | (19,678.71) | (19,678.71) |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | | 19,432.67 | 1,850.94 | 0.63 | 53.44 | (22,776.58) | (1,438.90) |

26ஆம் பக்கத்திலிருந்து 54ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

கொழும்பு
2012 ஓகத்து 17

காசுப்பாய்ச்சல் கூற்று
2012 மாச்சு 31இல் முடிவடைந்த ஆண்டு

| | குறிப்பு | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வருமான வரிச் செலவுகளுக்கு முன்னான இழப்பு | | (17,161.04) | (176.74) | (19,675.42) | (377.75) |
| பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள் | | | | | |
| தேய்மானம்/ பதிவழிப்பு | | 3,689.90 | 4,312.88 | 3,434.06 | 3,968.63 |
| நிதிச் செலவு | 19.1 | 1,642.30 | 831.89 | 1,462.20 | 671.48 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனை மீதான (இலாபம்)/ இழப்பு | 18 | 8.87 | (2,181.15) | 8.87 | (2,178.19) |
| நிதி வருமானம் | 19.2 | (204.56) | (47.62) | (197.68) | (13.37) |
| முன்னுரிமைப் பங்குகளின் விற்பனை மீதான இலாபம் | 18 | - | (1,000.00) | - | (1,000.00) |
| பங்கிலாப வருமானம் | 18 | - | - | (150.00) | (695.34) |
| அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டினை மாற்றிப்பதிதல் | | - | (18.81) | - | - |
| மெதுவாக அசையும் இருப்பிற்கான ஏற்பாடு | 20 | 101.40 | 98.21 | 101.40 | 98.21 |
| பேணல் ஒதுக்குகளின் ஐய அறவிடல்களுக்கான ஏற்பாடு - வட்டி நீங்கலாக | | 148.69 | 402.24 | 148.69 | 402.24 |
| தேறல் செய்யப்படாத செலாவணி (இலாபம்)/ இழப்பு மீதான தாக்கம் | | (1,065.21) | 417.29 | 49.02 | 405.72 |
| முன்கூட்டிய விற்பனைகளின் மீள்பதிவு | | (3,775.09) | (4,326.37) | (3,775.09) | (4,326.37) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 15.1 | 639.35 | 407.21 | 570.29 | 351.81 |
| தொழிற்படு மூலதன மாற்றல்களுக்கு முன்னான தொழிற்பாட்டு இழப்பு | | (15,975.39) | (1,280.97) | (18,023.66) | (2,692.93) |
| இருப்புக்களின் அதிகரிப்பு | | (124.97) | (667.08) | (73.79) | (649.17) |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் அதிகரிப்பு | | (2,821.62) | (2,300.64) | (2,595.67) | (2,294.11) |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு | | 27,632.24 | 6,160.86 | 28,830.23 | 6,807.32 |
| பேணல் ஒதுக்குகளில் அதிகரிப்பு | | (4,326.70) | (4,098.75) | (4,326.70) | (4,098.75) |
| வானூர்தி பாதுகாப்பு வைப்புக்களில் அதிகரிப்பு | | (552.97) | (807.89) | (552.97) | (807.89) |
| தொழிற்பாடுகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) உருவாக்கப்பட்ட காசு | | 3,830.59 | (2,994.47) | 3,257.44 | (3,735.53) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவு | | (1,087.41) | (746.70) | (917.67) | (661.19) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 15.1 | (112.22) | (117.75) | (92.08) | (104.02) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (13.60) | (11.65) | - | - |
| தொழிற்பாடுகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல் | | **2,617.36** | **(3,870.57)** | **2,247.69** | **(4,500.74)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 20.30 | 44.70 | 13.42 | 10.45 |
| பங்குகளிலான முதலீடு | | (0.87) | (41.44) | (0.87) | (41.44) |
| முன்னுரிமைப் பங்குகளின் விற்பனையிலிருந்தான பெறுகைகள் | | - | 1,000.00 | - | 1,000.00 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | | (1,503.93) | (968.39) | (1,428.75) | (894.13) |
| எந்திரகளின் பழுதுபார்ப்பிற்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | | (3,199.40) | (2,171.42) | (3,199.40) | (2,171.42) |
| அருவச் சொத்துக்களின் கையேற்பு | | (1.55) | (6.95) | (1.40) | (5.51) |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பெறுகைகள் | | 12.60 | 14,529.97 | 12.60 | 14,526.56 |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | | **(4,672.85)** | **12,386.47** | **(4,604.40)** | **12,424.51** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | | | |
| வட்டி உழைக்கின்ற பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு | 14 | (2,548.83) | (14,947.09) | (2,239.87) | (14,438.80) |
| வட்டி உழைக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகளிலிருந்தான பெறுகைகள் | | 5,119.05 | 3,029.21 | 5,119.05 | 3,017.65 |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு | | **2,570.22** | **(11,917.88)** | **2,879.18** | **(11,421.15)** |
| **காசு மற்றும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (வீழ்ச்சி)** | | **514.73** | **(3,401.98)** | **522.47** | **(3,497.38)** |
| **ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **10** | **(3,853.12)** | **(451.15)** | **(4,155.19)** | **(657.81)** |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்** | **10** | **(3,338.39)** | **(3,853.12)** | **(3,632.72)** | **(4,155.19)** |

26ஆம் பக்கத்திலிருந்து 54ஆம் பக்கம் வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

கொழும்பு
2012 ஓகத்து 17

## 1. கம்பனித் தகவல்கள்

### 1.1 பொது

**கம்பனி**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் (கம்பனி) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தலமும் எயார்லையின்ஸ் நிலையம், பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையம், கட்டுநாயக்கா, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகளின் போக்குவரத்திற்காக சர்வதேச ரீதியாக அட்டவணையிடப்பட்ட, அட்டவணையிடப்படாத வான் சேவைகளைத் தொழிற்படுத்துதல், இலங்கைக்கான குறித்துரைக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனமாக சரக்கு மற்றும் அஞ்சல் பணிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்தில் வான் முனைக் கோடிச் சேவைகளை வழங்குதல், விமானத்தில் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, விடுமுறைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு பயண வசதிப் பொதிகளைச் சந்தைப்படுத்தல், பயணிகள் போக்குவரத்திற்காக உள்நாட்டு வான் டக்சி சேவைகளைத் தொழிற்படுத்தல் என்பன ஏனைய முக்கிய பணிகளுக்குள் உள்ளடங்குகின்றன. மூன்றாம் தரப்பினருக்கு பராமரிப்புப் பணிகளை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு சேவைகள் மற்றும் வான் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளுள் அடங்குகின்றன.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

துணை நிறுவனத்தின் பிரதான நடவடிக்கை யாதெனில் பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்தினூடாக தொழிற்படுகின்ற வான் நிறுவனங்களுக்கு பறப்புக்களுக்குள்ளேயான உணவு வசதிகளை வழங்குவதாகும். மற்றைய துணை நடவடிக்கைகள் பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை நடத்துதல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் பண்டாரநாயக்கா சர்வதேச வானூர்தி நிலையத்தில் மாறிச் செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதியை முகாமைப்படுத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

### 1.3 வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2012 மாச்சு 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2012 ஓகத்து 17ஆம் திகதியில் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 தயாரிப்பிற்கான அடிப்படை

வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி, நிதியியல்கூற்றுக்கள் ஒன்று சேர்ந்த அடிப்படையிலும், வரலாற்று ரீதியான செலவு மரபுகளின் அடிப்படையிலுமே தயாரிக்கப்படுகின்றன. வேறுவிதமாக குறிப்பிடப்படுகின்ற வேளைகளில் தவிர நிதியியல்கூற்றுக்கள் இலங்கை ரூபா மில்லியனிலேயே காட்டப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பெறுமதிகளும் இலட்சம் இலங்கை ரூபாவிற்கு அணித்தாக முழு எண்ணிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

#### 2.1.1 இணங்குவிப்பு கூற்று

ஐந்தொகை, வருமானக்கூற்று, பங்கு மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் சேர்த்து (நிதியியல்கூற்றுக்கள்) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1.2 தொடர்ந்து செல்லும் கரிசனை

நடப்பாண்டு காலப்பகுதியில் கம்பனி ரூ.19,678.71 மில்லியன் (2011 - 381.61 மில்லியன்) கொண்ட இழப்பினைப் பதிவு செய்தது. மேலும், கம்பனி ரூ.22,776.58 மில்லியன் ஒன்று சேர்ந்த இழப்பினை (2011 - ரூ.3,097.87 மில்லியன்) பதிவு செய்ததுடன் கம்பனியின் நடப்புப் பொறுப்புக்கள் இதன் நடைமுறைச் சொத்துக்களை ரூ.36,524.74 மில்லியனால் (2011 - 9,741.38 மில்லியன்) விஞ்சியதுடன் ஐந்தொகை நாளன்று உள்ளவாறு கம்பனியின் மொத்த பங்கு மூலதனம் ரூ.1,438.90 மில்லியன் கொண்ட எதிர்க்கணியப் பெறுமதிக்கு வீழ்ச்சியடைந்தது.

கம்பனி பதிவு செய்த இழப்புக்களுக்கு பல்வேறு காரணிகள் பங்களித்தன. இதில் கடந்த அண்மைக் காலத்தில் உலகளாவிய வான் போக்குவரத்து தொழில் துறையின் செயலாற்றத்தில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியே முக்கியமான வெளிக் காரணமாக அமைந்திருந்தது. எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஐரோப்பாவின் மந்த நிலை, மத்திய கிழக்கில் காணப்பட்ட அரசியல் குழப்பநிலை என்பனவற்றை இவ்வீழ்ச்சிக்கான காரணங்களாக

எடுத்துக்காட்டலாம். மேலும், தொழிற்பாட்டு வினைத்திறன்களை எய்துவதற்கும் போட்டித்தன்மையுடன் விளங்குவதற்கும் வானூர்தித் தொகுதிகளை விரிவுபடுத்தி நவீனமயப்படுத்துவதற்குப் போதுமான நிதி இல்லாமையும் முக்கியமான உள்ளகக் காரணியாக விளங்கியது.

இலங்கை அரசாங்கம் நாட்டின் எதிர்கால வாய்ப்பிற்கான தொலைநோக்காக சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்வதனையும் இலங்கையில் பிராந்திய வான் போக்குவரத்து மையத்தினை உருவாக்குவதனையும் குறித்திருக்கிறது. சிறிலங்கன் எயார்லையின்ஸ் தேசிய போக்குவரத்தாளராக இருப்பதனால் தேசியக் கொள்கையிலும் உபாயத்திலும் பொருளாதார முயற்சிகளிலும் இன்றியமையாத பங்காளராகக் கருதப்படுகிறது. இதற்கமைய இலங்கை அரசாங்கம் அதன் தேசிய குறிக்கோளினை அடைவதற்கு வான் நிறுவனத்தினைத் தொடர்ந்து நடத்துவது மட்டுமன்றி விரிவாக்கம் செய்து வலுப்படுத்தும் அதன் கடப்பாட்டினையும் காட்டியிருக்கிறது.

கம்பனியினால் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் (சர்வதேச வான் போக்குவரத்து ஆலோசனையாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது) இலங்கை அரசாங்கத்தினால் கடந்த ஆண்டு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது. வியாபாரத் திட்டமானது முக்கியமான தேவைப்பாடாக வானூர்தித் தொகுதிகளை விரிவாக்குவதனையும்/ நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அடையாளம் கண்டிருப்பதுடன் இதற்கமைய திட்டத்தின்படி கம்பனியின் தொகுதிகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நிதியாண்டில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட மூலதன உள்ளீட்டிற்கான அமைச்சரவை ஒப்புதல் உட்பட இவ்வியாபாரத் திட்டத்திற்கு உதவியளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. இந்த ஐந்து ஆண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நடப்பு நிதியாண்டில் ரூ.14,286.22 மில்லியன் கொண்ட தொடக்க தொகையொன்று இலங்கை அரசாங்கத்தினால் முதலீடு செய்யப்பட்டது. இன்னொரு முயற்சியாக, தேவையான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு கம்பனியின் திரண்ட ஐந்தொகையினை வலுப்படுத்தும் உத்தரவாத ஏற்பாடுகளுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளமை விளங்குகிறது. இதன்படி, கம்பனி 2012 மேயில் ஐ.அ.டொலர் 175 மில்லியன் நிதியியல் வசதிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

மேலும், வருமானத்தினை அதிகரித்தல், வானூர்தித் தொகுதிகளை விரிவாக்குதல், வழித்தட வலையமைப்பினையும் பறப்புக் காலத்தினையும் உச்சப்படுத்தல் மற்றும் சிக்கனமான செலவுக் கட்டுப்பாடுகளை உச்சப்படுத்தல் என்பனவற்றின் பொருட்டு கடந்த காலத்தில் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளாக தொடர்ந்தும் பின்பற்றப்படும்.

இன்னொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் கம்பனி உலகின் புகழ் பெற்ற "வன்வேர்ள்ட் எயார்லையின் எலையின்ஸ் இல் உறுப்புரிமைக்காக தெரிவு செய்யப்பட்டமையாகும். இது உலகளாவிய 800 இற்கும் மேற்பட்ட புதிய சேரிடங்களுடன் இணைக்கப்படுவதன் மூலம் உலகளாவிய இதன் பிரசன்னம் விரிவடைவதுடன் பாரியதும் மிகச் சிறந்த வர்த்தக அடையாளங்களைக் கொண்டவையுமான சில வானூர்தி நிறுவனங்களுடன் பறப்பது வான் நிறுவனத்தின் வளர்ச்சி உபாயத்திற்கும் உதவும்.

கம்பனியினால் ஆரம்பிக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட்டு வரும் மேற்குறிப்பிட்ட பங்கு மூலதன உள்ளீடு, ஏனைய நிதியிடல் மற்றும் தொழிற்பாட்டு முயற்சிகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் பணிப்பாளர்கள் இதனை மதிப்பீடு செய்துள்ளதுடன் கம்பனி இலாபத்தன்மையினை உபாயப்படுத்தக் கூடியதும் கம்பனியின் தேறிய சொத்துக்களை வலுப்படுத்தக் கூடிய நிலையிலும் அண்மைய எதிர்காலத்தில் தற்போதைய தொழிற்பாடுகளை தொடரும் நிலையிலும் காணப்படும் எனவும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

### 2.1.3 ஒப்பீட்டுத் தகவல்கள்

குறிப்பு 23இல் வெளிப்படுத்தப்பட்டவாறு, கணக்கீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட மாற்றம் தவிர, பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் முன்னைய ஆண்டுகளுடன் ஒத்துச்செல்வதாகவேயுள்ளன. நடப்பாண்டிற்கான சமர்ப்பிப்புக்களை உறுதிப்படுத்தும் விதத்தில் முன்னைய ஆண்டின் எண் தொகைகளும் குறிப்புக்களும் தேவையானவிடத்து மீள ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.2 ஒன்று திரட்டலுக்கான அடிப்படை

ஒன்று திரட்டிய நிதியியல்கூற்றுக்கள், சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட்டினதும் அதற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டினதும் ஒவ்வோராண்டும் மாச்சு 31ஆம் நாளன்று உள்ளவாறான நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. அதே அறிக்கையிடும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள துணை நிறுவனத்தின் நிதியியல்கூற்றுக்கள் வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஒத்துச் செல்லும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தி தாய்க் கம்பனியினதைப் போன்றே தயாரிக்கப்பட்டுள்ளன.

குழுமத்திற்குள்ளேயான குறிப்பிடத்தக்க நிலுவைகள், கொடுக்கல்வாங்கல்கள், வருமானம் மற்றும் செலவுகள், இலாபம் மற்றும் இழப்புக்கள், குழுமத்திற்குகிடையேயான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றுகின்ற பங்கிலாபங்கள் என்பன முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

துணை நிறுவனமானது கூட்டிணைக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது அதன் கட்டுப்பாடு தொடங்கிய திகதியிலிருந்து முழுமையாக ஒன்று திரட்டப்பட்டதுடன் அதன் கட்டுப்பாடு நிறுத்தப்பட்ட திகதி வரை தொடர்ந்தும் திரட்டப்பட்டது.

## 2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருதுகோள்களும்

திரட்டிய நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடும் திகதியன்றுள்ள அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் தொகை, பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மற்றும் வெளிப்படுத்துகை என்பனவற்றைப் பாதிக்கும் தீர்ப்பு, மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பனவற்றைப் பேணுவதனைத் தேவைப்படுத்துகின்றது. முக்கியமான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் இணைந்த கருதுகோள்கள் தற்போதைய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பவங்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவங்களையும் மற்றைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

விடயம் சார்ந்த மற்றைய விடயங்களிடையே பின்வரும் முக்கிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

(அ) தீர்ப்பு

(i) எதிர்பாராத பொறுப்புக்கள் - வழக்காடல்கள்

நடப்பு நிதி ஆண்டின் முடிவில் கம்பனி பல்வேறு தரப்பினருடனுமான பல்வேறுபட்ட வழக்குகளை நிலுவையில் வைத்திருந்தது. பணிப்பாளர் சபை கம்பனியின் சொலிசிஸ்டர்களுடன் மேற்கொண்ட தகுந்த ஆலோசனைகளின் பின்னர், ஒவ்வொரு வழக்கினதும் தகுதியினை மதிப்பிட்டு, எதிர்காலத்தில் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று ஏற்படக்கூடிய சாத்தியமிருக்கும் என தீர்மானித்த பொழுது தேவையான ஒதுக்கங்களை மேற்கொண்டது.

(ii) தொழிற்படுகின்ற குத்தகைகள்

வானூர்திகள் மற்றும் எந்திரங்கள் தொடர்பாகக் கம்பனி வர்த்தகரீதியான குத்தகை ஒழுங்குகளை மேற்கொண்டது. இணங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், கம்பனியானது அனைத்து முக்கியமான இடர்நேர்வுகளையும் அத்தகைய சொத்துரிமை நன்மைகளையும் பிடித்து வைத்திருக்காத விதத்தில் இது உருவாக்கப்பட்டிருக்குமிடத்து அவை தொழிற்பாட்டுக் குத்தகைகள் என அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) மதிப்பீடுகள்

(i) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பனவற்றின் தேய்மானம்

சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு மற்றும் அச்சொத்துக்கள் பொருளாதார ரீதியாக பயன்படும் காலம் என்பனவற்றின் அடிப்படையில் முகாமைத்துவம், சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களுக்கு பயன்படக்கூடிய காலம் மற்றும் மீதிப் பெறுமதி என்பனவற்றை வழங்குகின்றது. ஒவ்வொரு ஐந்தொகை நாளன்றும் முகாமைத்துவம் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க வாழ்நாள் காலம் மற்றும் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்து முன்னைய மதிப்பீடுகள் மற்றும் இச்சொத்துக்களின் விடயங்களை செயன்முறைப்படுத்துகின்ற முன்னைய மதிப்பீடுகள் மற்றும் பொருளாதார நன்மைகளின் நுகர்வு மாதிரி என்பனவற்றுடன் ஒத்துச்செல்வதனையும் உறுதிப்படுத்தியது. பயனுள்ள வாழ்நாள் காலம் மற்றும் இச்சொத்துக்களின் மீதிப் பெறுமதி என்பனவற்றின் மாற்றங்கள் எதிர்கால தேய்மானத்தின் விதிப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

(ii) வானூர்தி எந்திரங்களின் முக்கிய பழுதுபார்த்தல் செலவுகளைப் பதிவழித்தல்

இணங்கப்பட்ட குத்தகை நியதிகளுக்கிணங்க எந்திரங்கள் மற்றும் தரையிறங்கும் சாதனங்கள் தொடர்பாக பாரிய பராமரிப்பு பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் வேண்டுமெனக் கம்பனி தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்குத் தயாராக இருக்கும் பொழுது கம்பனி அத்தகைய செலவுகளை பெற்றுக் கொள்கிறது. பெற்றுக் கொள்ளப்படக் கூடிய செலவுகள் விற்பனையாளரின் பொருட்பட்டியல் இல்லாதவிடத்து செய்யப்படும் சிறந்த மதிப்பீடுகள் மற்றும் அத்தகைய பரிசோதனைகளுக்கான வரவுக் குறிப்புக்கள் மற்றும் முன்நிதியிடல் என்பனவற்றைக் கணக்கில் எடுத்தல் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஏற்பட்ட செலவுத் தொகைக்கும் பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைக்குமிடையே ஏதாவது சாத்தியமான வேறுபாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவை முக்கியமான விடயமாகக் கருதப்படமாட்டாது. அதன் பின்னர், அத்தகைய செலவு பாரிய பராமரிப்பு பரிசோதனைகள் மற்றும் குறிப்பிட்ட குத்தகைக் காலம் போன்றவற்றிற்கிடையிலான மதிப்பிடப்பட்ட பறப்பு மணித்தியாலங்கள்/ சுற்றுக்கள் என்பனவற்றைக் குறைப்பதன் மூலம் தீர்க்கப்படும்.

(iii) பயன்படுத்தப்படாத பயணிகள் பயணச்சீட்டு

போக்குவரத்து வழங்கப்படும் பொழுது பயணிகள் மற்றும் சரக்கு விற்பனைகள் என்பன தொழிற்பாட்டு வருமானமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்கள், வானூர்தி சுமைப்பட்டியல்களின் பெறுமதி பயணங்களின் முன்கூட்டிய விற்பனைகளாக நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களும் வான் பற்றுச்சீட்டுக்களும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதொரு காலப்பகுதிக்குப் பின்னரும் பயன்படுத்தப்படாதிருக்குமிடத்து அவற்றின் பெறுமதி வருவாயாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நடப்பு நிதியியல் ஆண்டில், முகாமைத்துவம் அத்தகைய காலப்பகுதியை முன்னைய மதிப்பீடான 2 ஆண்டுகளிலிருந்து 1 ஆண்டிற்கு திருத்தியிருக்கிறது. காலத்தினைக் குறைப்பது தொடர்பான தீர்மானத்தினை எடுக்கையில், நியதிகள் மற்றும் நிபந்தனைகள், வரலாற்று ரீதியான போக்குகள் பயண மாதிரிகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பொருளாதாரச் சூழல் என்பனவற்றை உள்ளடக்கிய பல காரணிகள் முகாமைத்துவத்தினால் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டன.

குறிப்பிட்ட மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம் இந்நிதியியல்கூற்றுக்களுக்கான குறிப்பு 23இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(iv) அடிக்கடி பறக்கும் பிளையர் நிகழ்ச்சித்திட்டம்

கம்பனி அடிக்கடி பறப்பவர்களுக்காக பிளைஸ் ஸ்மைல் என்ற நிகழ்ச்சித்திட்டத்தினை தொழிற்படுத்துகிறது. இது, ஒன்றுசேர்ந்த மொத்த மைல்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்கு பயண விருதுகளை வழங்குகிறது. பயணிகளின் வருமானத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி வழங்கப்படும் அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகள் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்பட்டன. வருமானத்தினைப் பிற்போடுதல், மீட்பினது வரலாற்றுப் போக்கினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட மீட்பானது இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாடுகளை எறிவு செய்வதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்டது. வழங்கப்பட்ட இந்நன்மைகளின் சந்தைப் பெறுமதி தொடர்பான சேவைகளின் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. இதற்கான விருது நன்மைகளும் மீட்கப்படத்தக்கவையாக இருக்கும். இம்மதிப்பீடுகள் ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொறுப்புக்களும் அதற்கேற்ப சீராக்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட மாற்றங்களின் தாக்கம் இந்நிதியியல் கூற்றுக்களுக்கான 23ஆவது குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

(v) பராமரிப்பு ஒதுக்கு

பராமரிப்புத் தொடர்பான இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில், தொழிற்படுகின்ற குத்தகைகளின் கீழுள்ள பல்வேறு வானூர்திகள் மற்றும் எந்திரங்களின் பேரில் கம்பனியானது குத்தகைக்காரர்களுக்கு கொடுப்பனவினைச் செய்கிறது. இம்மாதாந்த கொடுப்பனவுகள் பறக்கும் மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அறவிடத்தக்க தொகை தொடர்பான சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் அறவிடத்தக்க அத்தகைய கொடுப்பனவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்கிறது. அறவிடுதல் சந்தேகமாக இருக்கும் பொழுது ஒதுக்கங்கள் செய்யப்படுகின்றன.

(vi) இருப்புக்கள்

பூர்வாங்க இருப்புக் கணக்கெடுத்தல் அடிப்படையில் கம்பனி இருப்புக்களின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. பழைய இருப்பு அத்துடன்/ அல்லது அறவிடத்தக்க பெறுமதியின் மதிப்பிடத்தக்க குறைப்பு பற்றி முகாமைத்துவம் தீர்மானிக்கும் பொழுது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(vii) ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்

வருமானக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதனை மதிப்பிடுவதற்காக கம்பனி ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் பெறத்தக்கவை பற்றி மீளாய்வு செய்கிறது. முகாமைத்துவமானது அத்தகைய ஏற்பாடுகளை மதிப்பீடு செய்யும் பொழுது வெளிநிற்கும் காலப்பகுதி மற்றும் அறவிடலில் காணப்படும் நிச்சயமற்ற தன்மைகளை காட்டுகின்ற முகாமைத்துவம் அறிந்திருக்கும் வேறு ஏதேனும் காரணிகள் என்பனவற்றின் பரிசீலனையின் அடிப்படையில் தீர்ப்புக்களைப் பயன்படுத்துகிறது.

(இ) கருதுகோள்கள்

(i) வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டம்

இலங்கையிலுள்ள அலுவலர்களின் ஒய்வுகால நன்மைகள் திட்டத்தின் செலவு உண்மையான மதிப்பீட்டினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. உண்மையான பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதம், சிறப்பு இலாபக் கட்டணம், ஓய்வு பெறும் வயது மற்றும் தற்பொழுது நடைபெற்று வரும் கம்பனியின் தொழிற்பாடு என்பனவற்றைக் கருத்திற் கொண்ட கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திட்டத்தின் நீண்டகால தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன.

(ii) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் மீள்மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள், சுதந்திரமான தகுதி வாய்ந்த மதிப்பிட்டாளரொருவரின் சேவையினைப் பயன்படுத்தி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அறவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு கருதுகோள்களையும் மதிப்பீட்டு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றார்.

## 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

### 2.4.1 வெளிநாட்டு நாணய மாற்று

நிதியியல்கூற்றுக்கள் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான தொழிற்பாட்டு நாணய வீதத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகை நாளில் நிலவும் செலாவணியின் தொழிற்பாட்டு நாணய வீதத்தில் மீள மாற்றப்படுகின்றன. அதன் மூலம் தோன்றிய வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் வருமானக்கூற்றில்

அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான செலவின் நியதிகளில் அறவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள் ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்பட்டன.

2.4.2 வரி விதிப்பு

(i) நடைமுறை வருமான வரி

**கம்பனி**

(அ) **உள்ளூர் வரி விதிப்பு**

1994 ஓகத்தில் கம்பனிக்கு பாரிய சிறப்பு நிலைக் கம்பனி என்ற அந்தஸ்து இலங்கை முதலீட்டுச் சபையினால் வழங்கப்பட்டது. அது அப்போதைய கால கட்டத்தில் காணப்பட்ட வரி விலக்கினை 1998 மாச்சு 31ஆம் நாள் வரை நீடித்தது. 1998 மாச்சில் இலங்கை முதலீட்டுச் சபை வரி விலக்கினை 2013 மாச்சு 31 வரை மேலும் நீடித்தது. 2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2011 பெப்புருவரியில் கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகள் அனைத்திற்கும் 2011 ஏப்பிறல் 1இலிருந்து 2021 மாச்சு 31 வரையான 10 ஆண்டு காலப்பகுதிக்கு வரி விலக்கினைப் பெற்றது.

(ஆ) **வெளிநாட்டு வரி விதிப்பு**

கம்பனி இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் மேற்கொள்கின்ற அதன் வெளிநாட்டுத் தொழிற்பாடுகளுக்கு வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். எனினும், கம்பனிக்கு வரி இழப்புக்களை முன்கொண்டு செல்லத்தக்க வசதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனால் நடப்பாண்டில் வரி செலுத்தும் பொறுப்பு எதுவுமில்லை.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

வருமான வரிச் செலவினம் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி இரண்டினையும் உள்ளடக்குகிறது. வருமான வரிச் செலவினம் என்பது பங்கு மூலதனத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானவற்றின் அளவு வரையானவை தவிர்ந்த இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை இது பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

நடைமுறை வரி என்பது ஆக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது பின்னர் அறிக்கையிடும் திகதியில் ஆக்கப்பட்டவைகள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்படத்தக்க வரிக்கு செய்யப்பட்ட ஏதேனும் சீராக்கங்களைப் பயன்படுத்தி இவ்வாண்டிற்காக வரி விதிக்கத்தக்க வருமானத்தின் மீது செலுத்தப்பட வேண்டிய வரியாகும்.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின்படி வானூர்திகளின் சமயலறை மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்கான உணவகம் என்பனவற்றிலிருந்தான வருமானங்களுக்கு 2021 மே 31ஆம் நாள் வரை விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் வழமையான வரி வீதத்திற்கு உட்பட்டனவாகும்.

(ii) பிற்போடப்பட்ட வருமான வரி

பிற்போடப்பட்ட வருமான வரியானது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் கொண்டு செல்லப்படும் தொகை என்பனவற்றிற்கிடையில் ஐந்தொகை திகதியன்று காணப்படும் தற்காலிக வேறுபாடுகளின் மீதான பொறுப்பு முறைகளைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**கம்பனி**

கம்பனி, வரி விடுப்புக் காலப்பகுதியில் இருப்பதனால் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகாது என்பதுடன் தற்காலிக வேறுபாடுகள் எதுவும் வரி விலக்கல் காலப்பகுதியில் காணப்படவில்லை. இதன்படி, இந்நிதியியல்கூற்றில் பிற்போடப்பட்ட வரி விதிப்பிற்கான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**துணைக் கம்பனி - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் கொண்டு செல்லப்பட்ட தொகைக்கும் வரி விதிப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான தற்காலிக வேறுபாடுகளுக்குட்பட்ட விதத்தில் ஐந்தொகை பொறுப்பு முறையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி அங்கீகரிக்கப்படுகிறது. பிற்போடப்பட்ட வரித் தொகையின் ஏற்பாடு ஐந்தொகை திகதியன்று ஆக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது நிலையாக ஆக்கப்பட்ட வீதங்களைப் பயன்படுத்தி, முன்கொண்டு செல்லப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் தேறல் அல்லது தீர்ப்பனவு என்பனவற்றின் எதிர்பார்க்கப்படும் தன்மையின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரித் தொகை ஏற்பாடு செய்யப்படுகிறது.

பிரதானமான தற்காலிக வேறுபாடுகள் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம், முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புக்கள் மற்றும் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைக் கடப்பாடுகள் என்பனவற்றிலிருந்து தோன்றின.

முன்கொண்டு செல்லப்பட்ட பயன்படுத்தப்படாத வரி இழப்புக்கள் தொடர்பான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களுக்கெதிராக எதிர்காலத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கும் வரி இலாபத்தினைப் பயன்படுத்த முடியுமென்ற அளவிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள், சொத்துக்களுக்கு எதிராக எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்களின் கிடைப்பனவினைப் பயன்படுத்த முடியும் என்ற அளவிற்கு மட்டுமே அங்கீகரிக்கப்படுகிறது. பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஐந்தொகைத் திகதியில் மீளளிப்பு செய்யப்படுவதுடன் தொடர்பான வரி நன்மைகள் கிடைக்கக் கூடியதாக இருக்காது என்ற அளவினால் குறைக்கப்படுகின்றன.

### 2.4.3 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

(அ) கிரயம் மற்றும் மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பன ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. கிரயத்தினை உள்ளடக்கிய செலவினம் கொள்வனவில் உடனடியாக சேர்க்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்படுகையில் அத்தகைய மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் அவற்றின் மீது இடம்பெற்ற தேய்மானங்கள் மற்றும் பழுதுறும்தன்மை ஏதுமிருப்பின் அதனைக் கழித்து மீள் மதிப்பீட்டுத் தொகைக்கு கொண்டு செல்லப்படுகிறது. மற்றைய அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் தேய்மானங்கள் ஏதுமிருப்பின் அதனைக் கழித்த வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

சொத்தொன்று மீள் மதிப்பீடு செய்யப்படும் பொழுது, கொண்டு செல்லும் தொகையில் காணப்படும் ஏதேனும் அதிகரிப்பானது, இதே சொத்துக்கள் தொடர்பான முன்னைய மீள் மதிப்பீட்டின் ஏதேனும் வீழ்ச்சிகள் காணப்பட்டு இவை முன்னர் செலவினமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தாலொழிய, மீள் மதிப்பீட்டு மிகைக்கு நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில், அதிகரிப்பானது முன்னைய பதிவழிப்பின் அளவிற்கு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. சொத்தொன்று தொடர்பாக மீள் மதிப்பீட்டு மிகையில் எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகைகள் சொத்துக்களின் இளைப்பாறல் அல்லது விற்கப்பட்டதன் மீதான ஒன்று சேர்ந்த இலாபங்களுக்கு நேரடியாக மாற்றல் செய்யப்படுகின்றன.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்தும் பெருமளவிற்கு வேறுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் ஏற்படும் கிரயங்கள் இவ்விடயங்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு பாய்வதற்கும் கிரயத்தினை நம்பகரமான முறையில் அறவிடத்தக்கதாகவும் இருக்கும் சாத்தியத்தில் மட்டும் பொருத்தமான விதத்தில் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் அல்லது தனியானதொரு சொத்தாக உள்ளடக்கப்படுகின்றன.

பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அவை உறப்பட்ட காலப்பகுதிக்குரிய வருமானக்கூற்றில் விதிக்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றைய பல விடயங்களுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

**(i) மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வானூர்தி உதிரிப்பாகங்கள்**

உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்ற மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய வானூர்தி உதிரிப்பாகங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட அதன் பயன்பாட்டு ஆயுள் காலப்பகுதியில் தேய்வடைகின்றது. இவ்விடயம் “வானூர்தி தொடர்பான சாதனங்கள்” என்ற தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகிறது.

**(ii) செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம்**

செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் கிரயத்தில் காட்டப்படுவதுடன் இது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது ஆரம்பிக்கப்படும் நாள் வரையில் ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. தொழிற்படும் பொழுது, செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கீழ் பொருத்தமான வகைக்கு மாற்றல் செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் காலப்பகுதிக்கு தேய்மானம் செய்யப்படுகிறது.

(ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்துச் சொத்துக்கள் பொறிகள் மற்றும் சாதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் மீது நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. சமமான தவணைகளின் மூலம் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் காலப்பகுதியில் அத்தகைய தொகையினைப் பதிவழிப்பதற்காக இவை மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய வானூர்தியின் உதிரிப்பாகங்கள் | - | 8 ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது குத்தகைக் காலப்பகுதி |
| பொறி மற்றும் சாதனங்கள் | - | சாதனங்களினது வகையின் அடிப்படையில் 1 ஆண்டிலிருந்து 10 ஆண்டுகள் வீச்சினைக் கொண்ட காலப்பகுதி |
| கட்டிடங்கள் | - | உயர்ந்தபட்சம் 20 ஆண்டுகள் என்ற நியதிக்குட்பட்டு எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க காலப்பகுதி |

தேய்மானத்தின் தொகை, முறை மற்றும் காலம் என்பன முன்னைய மதிப்பீடுகளுடன் ஒத்துச்செல்வதனையும் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் நடைமுறைப்படுத்தலிலுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்படும் நுகர்வு மாதிரிகளையும் உறுதிப்படுத்தும் விதத்திலும் சொத்துக்களின் பயன்மிக்க ஆயுள்காலம், எஞ்சிய பெறுமதி மற்றும் தேய்மான முறையானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் பொருத்தமானவிடத்து மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்பட்டது.

(இ) அங்கீகரிக்கப்படாதவை

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விடயமொன்று அகற்றப்படும் பொழுது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது, அது அங்கீகரிக்கப்படாமல் போகிறது. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாதமையின் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது இலாபம் (தேறிய அகற்றல் பெறுகைகளுக்கும் சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகைக்குமிடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகிறது) சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாது ஆண்டிற்கான நிதியியல்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

### 2.4.4 வானூர்தி பராமரிப்பு ஒதுக்கு

வானூர்தி பராமரிப்பு ஒதுக்கு, தொழிற்படுகின்ற குத்தகை உடன்படிக்கையின் நியதிகளில் எந்திரங்கள், வான் கலங்கள் மற்றும் வானூர்திக் கூறுகள் என்பனவற்றின் எதிர்கால பழுதுபார்த்தலுக்காக மாதாந்த அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை உள்ளடக்கியுள்ளது. அத்தகைய கொடுப்பனவுகள், ஐந்தொகையில் ஐயத்திற்குரிய பெறத்தக்கவைகளுக்கான ஒதுக்கங்களைக் கழித்து பெறத்தக்கவைகள் என பதிவு செய்யப்பட்டுள்ளன. கம்பனியானது எந்திரங்கள், வான் கலம்கள், வான் கலக்கூறுகள் (ஒதுக்கிற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரையில்) என்பனவற்றின் பழுது பார்ப்பு மீது ஏற்பட்ட செலவுகளை, பராமரிப்பு சம்பவங்கள் முடிவடைந்ததும் அத்தகைய ஒதுக்குகளுக்கெதிராக குத்தகைக்கு விடுபவரிடமிருந்து அறவிட்டுக் கொள்கிறது. அறவிடத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் அறவிடத்தக்க அத்தகைய கொடுப்பனவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்கிறது. அறவிடத்தக்கவை ஐயத்திற்குரியனவாக இருக்கும் பொழுது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.5 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள், அச்சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளியல் நன்மைகள் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதுடன், அச்சொத்துக்களின் கிரயம் நம்பகமாக அளவிடக் கூடியதாக இருக்கும் போது மட்டுமே அருவச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதன்படி, இச்சொத்துக்கள், கிரயத்திலிருந்து ஒன்று சேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்று சேர்ந்த பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் கழித்து வரும் பெறுமதியில் ஐந்தொகையில் காட்டப்படும்.

தொடர்புடைய கணனி வன்பொருளிலிருந்து வேறாக்கக் கூடிய கணனி மென்பொருளின் கொள்வனவு அல்லது அபிவிருத்திச் செலவானது வேறாக மூலதனப்படுத்தப்படுவதுடன் 5 ஆண்டுகளுக்கு மிஞ்சாத வகையில் நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றன. பதிவழிப்புக் காலம் மற்றும் பதிவழிப்பு முறை என்பன ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மாற்றங்கள் தேறிய பெறுமதி மீளப் பெறப்பட முடியாது என்பதை எடுத்துக்காட்டினால் இச்சொத்துக்களின் தேறிய பெறுமதி பதிவழிப்புக்காக காலாந்தரம் மீளாய்வு செய்யப்படும்.

### 2.4.6 வானூர்தி எந்திரங்களின் முக்கிய பழுதுபார்ப்பு

முன் நிதிகள் மற்றும் உத்தரவாத கோரல்கள் நீங்கலாக ஒரு காலப்பகுதிக்கும் கூடுதலான எதிர்கால பொருளாதார நன்மைகளை வழங்குகின்ற வானூர்தி எந்திரங்களினதும் தரையிறங்கும் சாதனங்களினதும் பழுதுபார்த்தல் செலவு பயன்படுத்தப்படுவதுடன் முக்கிய பழுது பார்த்தல் மற்றும் குத்தகைக் காலப்பகுதிக்கிடையிலான குறுகிய காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

### 2.4.7 இருப்புக்கள்

பயன்படுத்த முடியாத பழைய மற்றும் மெதுவாக அசைகின்ற விடயங்களுக்காக உரிய ஏற்பாடுகளைச் செய்த பின்னர் கிரயம் மற்றும் தேறிய கைத்தேறத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதன் அடிப்படையில் இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அனைத்து இருப்புக்களும் நிறையேற்றப்பட்ட சராசரி செலவின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.8 வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்

வர்த்தக கிடைக்கத்தக்கவைகள் அறவிடமுடியாத மற்றும் ஐயத்திற்குரிய பெறத்தக்கவைக்கான ஏற்பாடுகள் நீங்கலாக பெறத்தக்கவை என மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் குறிப்பிடப்படுகின்றன. ஏனைய பெறத்தக்கவைகளும் தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவைகளும் அறிவிடமுடியா மற்றும் ஐயத்திற்குரிய பெறத்தக்கவை தொடர்பானவற்றைக் கழித்த செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### 2.4.9 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசிற்குச் சமமானவையும் வங்கியிலும் கையிலுமுள்ள காசு, அழைப்பு வைப்புக்கள் மற்றும் பெறுமதியில் மாற்றுவதில் குறிப்பிடத்தக்களவிற்கு இடர்நேர்வற்றவை என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிந்த காசுத் தொகைக்கு மாற்றுவதற்கு ஆயத்தமாகவுள்ள உயர்ந்த திரவத்தன்மை கொண்ட குறுங்கால முதலீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றன.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு மற்றும் வெளிநின்ற வங்கி மேலதிகப் பற்றுக்கள் நீங்கலான வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. குறுங்கால முதிர்ச்சிகளைக் கொண்ட முதலீடுகளும் (அதாவது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசிற்குச் சமமானவைகள் எனக் கருதப்படுகின்றன. வங்கி மேலதிகப் பற்றுக்கள் ஐந்தொகையில், வட்டி உழைக்கும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 2.4.10 குத்தகைகள்

#### (அ) தொழிற்படுகின்ற குத்தகைகள்

குத்தகைக்கு விட்டவர் குத்தகைக்கான நியதிகள் மீதான அனைத்து இடர்நேர்வுகளையும் மற்றும் சொத்துரிமை தொடர்பான நன்மைகளையும் கணிசமானளவில் பயனுள்ள விதத்தில் பிடித்து வைத்திருக்கின்றவிடத்து குத்தகையானது தொழிற்படு குத்தகை எனக் கருதப்படுகிறது. தொழிற்படு குத்தகைகளின் கீழ் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகள், வரவேண்டியவைகளாக இருக்கும் பொழுது அவை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

மீள் வடிவமைப்புச் செலவுகள் மூலதனமாக்கப்பட்டு பயனுள்ள ஆயுள் பகுதிக்குள்ளும் குத்தகைக் காலப்பகுதிக்குள்ளும் பதிவழிப்பு செய்யப்படுகின்றன.

#### (ஆ) நிதிக் குத்தகைகள்

இடர்நேர்வுகளும் நன்மைகளும் குத்தகைக்கு விடப்பட்ட விடயங்களின் சொத்துரிமைகளுக்கு ஏற்படுமிடத்து பயனுள்ள முறையில் கம்பனிக்கு மாற்றப்படுகின்ற குத்தகைகள் ஆரம்பத்தில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் அல்லது குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதியில் மூலதனமாக்கப்படுகின்றது. மூலதனமாக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என வெளிப்படுத்தப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களிலிருந்து கம்பனி பலனை எதிர்பார்க்கும் காலப்பகுதி வரை தேய்மானம் செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.9 இனைப் பார்க்கவும்.

தொடர்பான குத்தகைக் கடப்பாடுகள் பொறுப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. குத்தகைக் கொடுப்பனவுகள் மூலதனத்தையும் வட்டிக் கூறுகளையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுகின்றன. பொறுப்பின் எஞ்சியுள்ள நிலுவையின் மீது நிலையான காலாந்தர வட்டி வீதமொன்றினைப் பெறும் பொருட்டு குத்தகைக் காலப்பகுதியில் வருமானக் கூற்றுக்களுக்கு வட்டிக் கூறுகள் சேர்க்கப்படுகின்றன.

#### (இ) விற்பனையும் மீள் குத்தகையும்

தொழிற்பாட்டுக் குத்தகைகளில் தோன்றுகின்ற விற்பனை மற்றும் மீள் குத்தகைக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான இலாபங்கள், குறிப்பிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விற்பனைப் பெறுகைகள் விஞ்சாததொரு அளவிற்கு வருமானக்கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

#### (ஈ) பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவு

தொடர்பான தொழிற்பாட்டுத் குத்தகை உடன்படிக்கைகளின் திரும்பல் நிபந்தனைகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் பிற்போடப்பட்ட எந்திர தரமுயர்த்தல் செலவின் தற்போதைய பெறுமதி நடப்பிலில்லா சொத்துக்களின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் சொத்துக்களின் பயன்பாட்டுக்காலம் மற்றும் குத்தகைக்காலம் என்பனவற்றிற்கும் குறைவானதொரு காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டு இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36 இற்கிணங்க அளவிடப்பட்ட தொடர்பான பொறுப்புடன் சேர்த்து ஐந்தொகையில் ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.11 முதலீடுகள்

#### (அ) திறைசேரி முறிகளில் முதலீடு

திறைசேரி முறிகள் மீதான முதலீடு, முறிகளின் காலப்பகுதியினது முதிர்ச்சியின் அடிப்படையில் விளைவுகள் மீதான கழிவிடல் நீங்கலான செலவில் பதிவு செய்யப்படுகின்றன. அவை நிரந்தரமானவையாக இருக்குமென எதிர்பார்க்கப்படுமிடத்து மாத்திரம் பெறுமதியில் ஏற்படும் குறைவுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

#### (ஆ) துணைக் கம்பனிகளில் முதலீடு

கம்பனியின் நிதியியல்கூற்றுக்களில், துணைக் கம்பனியில் காணப்படும் முதலீடு, பெறுமதியில் ஏற்படக்கூடிய தற்காலிக குறைவு தவிர்ந்த வேறு ஏதேனும் ஒதுக்கங்கள் நீங்கலாக கிரயத்தில் கணக்கிடப்பட்டது.

#### (இ) ஏனைய நீண்ட கால முதலீகள்

நீண்டகால முதலீடுகள் கிரயத்தில் காட்டப்படுகின்றன. முதலீட்டின் செலவு என்பது கொள்வனவுச் செலவாகும். கொண்டு செல்லப்படும் தொகைகள் தற்காலிகமான விடயங்கள் நீங்கலாக, வீழ்ச்சியொன்றினை ஏற்றுக்கொள்ளும் விதத்தில் குறைக்கப்பட்டு தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு முதலீடும் தீர்மானிக்கப்படுகின்றன.

### 2.4.12 நிதியல்லா சொத்துக்களின் பழுதுறும்தன்மை

கம்பனியானது, ஏதேனும் சொத்து பழுதுறக்கூடிய தன்மையினைக் காட்டுகின்றதா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலிருந்தும் மதிப்பிட்டுக் கொள்கிறது. அத்தகைய அடையாளங்கள் ஏதும் காணப்படுமிடத்து அல்லது அத்தகைய சொத்திற்கு வருடாந்த பழுதுறும்தன்மை பற்றிய பரீட்சிப்பு தேவைப்படுமிடத்து, கம்பனியானது சொத்தின் அறவிடக்கூடிய தொகை பற்றி மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் கொண்டு செல்லக்கூடிய அறவிடத்தக்க தொகையினை விஞ்சுமிடத்து அச்சொத்து பழுதடைந்ததாகக் கருதப்பட்டு அறவிடத்தக்க தொகை பதிவழிக்கப்படுகின்றது.

### 2.4.13 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வுகளின் பெறுபேறாக, கம்பனி தற்பொழுது கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது அதன் அர்த்தம்) கொண்டிருக்கும் பொழுது அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கங்கள் வெளிப்பாய்கின்ற மூலவளங்கள் பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் காணப்படுமிடத்து கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் கடப்பாட்டுத் தொகையினையும் நம்பகமாக மதிப்பீடு செய்து கொள்ள முடியும். ஓரளவு ஏற்பாடு அல்லது முழு ஏற்பாடும் மீளளிக்கப்பட வேண்டுமென கம்பனி எதிர்பார்க்கும் பொழுது, மீளளிப்பு உறுதிப்படுத்தப்படும் வேளையில் மாத்திரம் இம்மீளாய்வு தனியானதொரு சொத்தாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏதேனும் ஏற்பாட்டு செலவு தொடர்பாக மீளச் செலுத்தல்கள் இருப்பின் அதனைக் கழித்து வருமானக்கூற்றில் காட்டப்படுகின்றன. பணத்தின் அந்நேரத்தின் பெறுமதியினது தாக்கம் பெரிதாக இருக்குமிடத்து, முன் வரி வீதத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழித்து விடுவதன் மூலம் ஒதுக்கங்கள் தீர்மானிக்கப்பட்டு அவை பணத்தின் நேரப் பெறுமதியின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளும் பொருத்தமானவிடத்து பொறுப்பிற்கான குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளும் பிரதிபலிக்கப்படுகின்றன.

பயன்படுத்தப்படும் கழிவிடல் முடிவுறுத்தப்படாத தாக்கத்திலிருந்து தோன்றுகின்ற ஒதுக்கங்களில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுமிடத்து அது வருமானக்கூற்றில் காட்டப்படுகின்றது.

### 2.4.14 காபன் வெளியேற்றம்

2012 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வந்த ஐரோப்பிய ஒன்றிய வெளியேற்ற வர்த்தகத் திட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளிலிருந்து பறப்புக்களைத் தொடங்குகின்ற அல்லது இறங்குகின்ற வான் நிறுவனங்களின் பறப்புக்கள் தொடர்பாக அவற்றின் காபனீரொட்சைட்டு வெளியேற்றம் கண்காணிக்கப்பட்டு ஆண்டுதோறும் அறிவிக்கப்படுவதுடன் அவற்றின் அவ்வாண்டிற்கான வெளியேறும் காபனீரொட்சைட்டு வெளியேற்றத்திற்குச் சமமானதொரு அளவில் அரசாங்கத்திற்கு புகை வெளியேற்றப் படியொன்றிற்கான தொகையினை ஒவ்வொரு ஆண்டும் செலுத்தக் கடமைப்பட்டனவாகும். கம்பனி இத்திட்டத்தின் கீழ் கம்பனி கட்டணமெதுவுமின்றி ஆரம்ப வெளியேற்றப் படியொன்றினை ஒதுக்கியுள்ளதுடன் இலவச ஒதுக்கினை விஞ்சிய விதத்தில் ஏதேனும் புகை வெளியேற்றம் காணப்படுமாயின் மேலதிகப் படிகளின் (வரவுகள்) கொள்வனவினூடாக அவற்றைச் செலுத்தக் கடப்பாடுடையனவாகும். உண்மையான புகை வெளியேற்றம் பெறப்பட்ட வரவுகளை விஞ்சுமிடத்து கம்பனி அப்பொறுப்பினை அங்கீகரிக்கும். ஐந்தொகை நாளில் பயன்படுத்தப்படாதிருந்த வரவுகள் 228,215 காபனீரொட்சைட்டு தொன்களாகக் காணப்பட்டன.

### 2.4.15 ஓய்வுகால நன்மைகள் தொடர்பான கடப்பாடுகள்

#### (அ) வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நன்மைகள் திட்டம் - பணிக்கொடை கொடுப்பனவு

கம்பனியினது வரையறுக்கப்பட்ட நன்மைகள் திட்டமாக விளங்கும் உறுதியளிக்கப்பட்ட பணிக்கொடையான ஓய்வுகால நன்மைகள் திட்டத்தினை ஒவ்வோராண்டும் கணிப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்ற வாக்குறுதி வழங்கப்பட்ட ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் தற்போதையப் பெறுமதியினை கம்பனி அளவிடுகின்றது.

'கணக்கீட்டாளரினால்' பயன்படுத்தப்பட்ட முக்கியமான கருதுகோள்கள் பின்வருமாறு:

| | | கம்பனி | | துணைக் கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | 2012 | 2011 |
| (i) | வட்டி வீதம் | 11% | 10% | 10% | 12% |
| (ii) | சம்பள அதிகரிப்பு வீதம் | | | | |
| | - இலங்கை ரூபா | 10% | 10% | | |
| | - ஐ.அ.டொலர் | 2% | 2% | | |
| | - நிறைவேற்று அலுவலர் | | | 10% | 10% |
| | - நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர் | | | 20% | 17% |
| (iii) | ஓய்வு பெறும் வயது - ஆண்டுகள் | 60 | 60 | 55 | 55 |

(iv) நிறுவனம் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கும்.

பணிக்கொடை பொறுப்புக்களுக்கு வெளியிலிருந்து நிதியிடப்படமாட்டாது. இவ்விடயம், ஐந்தொகையில் "ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள்" என்ற தொகுதியின் கீழ் காட்டப்படுகின்றன. வெளிநாடுகளைத் தளமாகக் கொண்ட ஊழியர்கள் அவர்களது சொந்த நாடுகளுக்குப் பொருந்தத்தக்க சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்.

(ஆ) வரைவிலக்கணம் செய்யப்பட்ட உதவுதொகைத் திட்டங்கள் - ஊழியர் சேம நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

இலங்கையிலுள்ள ஊழியர்கள், தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதிய உதவுதொகைகளுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதிய உதவுதொகைகளுக்கும் உரித்துடையவராவர். ஊழியர்களின் மொத்த ஊதியத்தில் கம்பனி, ஊழியர் சேம நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் 15 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்த வேளையில் துணை நிறுவனம் 12 சதவீதத்தினையும் 3 சதவீதத்தினையும் பங்களித்தது.

### 2.4.16 அடிக்கடி பறப்பவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம்

கம்பனி, அடிக்கடி பறப்பவர்களுக்காக 'பிளைஸ்மயில்' என அழைக்கப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்றினை தொழிற்படுத்துகிறது. அது ஒன்று சேர்ந்த மொத்த மைல்களின் அடிப்படையில் நிகழ்ச்சித்திட்டத்திலுள்ள உறுப்பினர்களுக்கு பயண விருதினை வழங்குவதாகும். அடிக்கடி பறப்பவர்களுக்கான நன்மைகளின் விருதிற்கு பயணிகள் வருமானத்தின் ஒரு பகுதி காரணமாக அமைவதுடன் இந்நன்மைகளின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும் வரை பிற்போடப்படுகின்றன. இவை ஐந்தொகையின் மீதான பிற்போடப்பட்ட வருமானத்தினையும் உள்ளடக்குகிறது.

இவ்வாண்டுப் பகுதியில், ஒன்று சேர்ந்த மைல்களில் பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படும் மைல்களை கம்பனி 60 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு திருத்துவதற்கு எண்ணுகிறது.

### 2.4.17 வருமான அங்கீகரிப்பு

**கம்பனி**

(அ) எயார்லையின்சின் வருமானம்

வருமானம் முக்கியமாக, பயணிகளைக் கொண்டு செல்லுதல், சரக்கு மற்றும் அஞ்சல், வானூர்திகளுக்கு முனைக்கோடிப் பணிகளை வழங்குதல், பொறியியல் பணிகள், உள்நாட்டு வானூர்தி டக்சி தொழிற்பாடுகள், வான் ஒப்பந்த பறப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து உருவாக்கப்படுகின்றது. குழுமத்திற்கான வருமானம் கம்பனிக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களை நீக்குகிறது.

(i) போக்குவரத்து வழங்கப்படும் பொழுது பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து விற்பனைகள் தொழிற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

(ii) பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி, முன்கூட்டிய பயணச்சீட்டு விற்பனைகளாக நடப்புப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பயன்படுத்தப்படாத பயணச்சீட்டுக்களினதும் வான்வழி பற்றுச்சீட்டுக்களினதும் பெறுமதி இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னும் பயன்படுத்தப்படாது இருக்குமாயின் வருமானமாக அங்கீகரிக்கப்படும்.

(iii) வானூர்தி நிலைய முனைக்கோடிப் பணிகளின் வழங்கல்களிலிருந்தான வருமானம், பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(iv) மூன்றாந்தரப்பினருக்கான பராமரிப்புப் பணிகளை வழங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானம் அத்தகைய அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(v) பறப்பு தொழிற்பாட்டுப் பணிகளை வழங்குவதிலிருந்தான வருமானம் அப்பணிகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) பங்கிலாப வருமானம்

பங்குடமையாளர் உரிமைகள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்படும் பொழுது பங்கிலாபங்கள் கணக்கிடப்படுகின்றன.

(இ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகிறது.

(ஈ) வட்டி வருமானம்

வட்டி வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

(உ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

பொருட்களின் விற்பனை

சொத்துடமையின் குறிப்பிடத்தக்க இடர்நேர்வுகளும் நன்மைகளும் வாங்குநருக்கு மாற்றல் செய்யப்படும் வேளையில் வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் பெறுமதிசேர் விற்பனை வரியினை நீக்குவதுடன் வர்த்தகக் கழிவுகளைக் கழித்ததன் பின்னர் இது பெறப்படுகின்றது. வரவேண்டிய அறவிடல்கள், அவற்றுடன் இணைந்த செலவுகள் அல்லது பொருட்கள் திரும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றமை மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவ தலையீடுகள் காணப்படுகின்றமை என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றவிடத்து வருமானம் அங்கீகரிக்கப்படமாட்டாது.

### 2.4.18 செலவின அங்கீகரிப்பு

உறப்பட்ட செலவு மற்றும் குறிப்பிட்ட சில விடயங்களின் வருமான உழைப்பு என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் செலவுகள் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வியாபரத்தினை தொழிற்படுத்தியமை மற்றும் வினைத்திறன் பொருட்டு சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் பேணல் என்பனவற்றின் பொருட்டு உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன. வருமானக்கூற்றினைக் காட்டுகின்ற நோக்கங்களுக்காக, கம்பனியின் மூலங்களையும் குழுமத்தின் செயலாற்றத்தினையும் நியாயமான முறையில் காட்டும் அடிப்படையில் “தொழிற்பாட்டுச் செலவினங்கள்” என்ற முறை பின்பற்றப்பட்டிருக்கிறது.

### 2.4.19 கடன்பாட்டுச் செலவுகள்

கடன்பாட்டுச் செலவுகள் பயன்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நோக்குடன் கணிசமான காலப்பகுதிக்கு தயாராக வைத்திருக்கப்படும் சொத்துக்களின் கையேற்பு, கட்டுமானம் அல்லது உற்பத்திக்கு நேரடியாக சேர்க்கப்படுகின்ற காலப்பகுதி நீங்கலாக அவை உறப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டு சொத்துக்களின் ஒரு பகுதியாக மூலதனமயப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.20 பிரிவு அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, மற்றைய பிரிவுகளிலிருந்து வேறுபட்டு, இடர்நேர்வுகளுக்கும் நன்மைகளுக்கும் உட்பட்டு குறிப்பிட்டதொரு பொருளாதார சூழலில் பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமமொன்றின் தனித்தன்மை வாய்ந்ததொரு கூறு எனக் கருதப்படுகிறது.

கம்பனி பல்வேறுபட்ட நாடுகளில் தொழிற்படுகின்றமையின் காரணமாக அதன் இடர்நேர்வுகளும் வருமான வீதங்களும் பாதிக்கப்படுவதால் புவியியல் ரீதியாக பரந்திருக்கும் அதன் தொழிற்பாடுகளின் அடிப்படையில் முக்கியமான பிரிவுகள், நிர்ணயிக்கப்படுகின்றன. ஆரம்ப விற்பனைகளின் மூலமான மொத்தப் புரள்வின் பகுப்பாய்வுகள் விற்பனை மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்திற்கான வருமானத்தினை ஒதுக்குவதன் மூலம் பெறப்படுகின்றது. குறிப்பிட்ட பிரிவிற்கான நேரடியாக அடையாளம் காணப்படாத செவுகள் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவில்லை.

புவியியல் ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்களையும் தொடர்பான பொறுப்புக்களையும் ஒதுக்குவதற்கு பொருத்தமானதொரு அடிப்படை காணப்படவில்லையென முகாமைத்துவம் கருதுகிறது. இதற்கமைய பிரிவிற்கான சொத்துக்கள், பிரிவிற்கான பொறுப்புக்கள் ஏனைய பிரிவிற்கான தகவல்கள் புவியியல்சார்ந்த பிரிவுகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படவில்லை.

வியாபாரப் பிரிவின் அடிப்படையிலான இரண்டாவது அறிக்கையிடல் குழுமத்தினால் வழங்கப்பட்ட பணிகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குழுமமானது இரண்டு முக்கிய வியாபாரப் பிரிவுகளான வான் போக்குவரத்திலும் அதன் துணை நிறுவனத்தினூடாக பறப்புக்களில் உணவு வழங்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கிறது.

## 2.5 2012 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்த இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டவாறு, குழுமமானது, இலங்கையின் கணக்கீட்டு நியமம் மற்றும் இலங்கையின் நிதியியல் அறிக்கையிடல் நியமம் என்பனவற்றை உள்ளடக்கிய புதிய இலங்கையின் கணக்கீட்டு நியமங்களை 2012 சனவரி 01ஆம் நாளிலிருந்து தொடங்கிய நிதியியல் காலப்பகுதியில் பின்பற்றவுள்ளது. இம்மாற்றத்திற்கு ஆயத்தமாகும் விதத்தில் குழுமமானது அதன் கணக்கீட்டுக் கொள்கைகளையும் நிதியியல் அறிக்கையிடலையும் மீளாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. குழுமமானது, ஆண்டு மாச்சு 31இல் முடிவடைவதனால் 2011 ஏப்பிறல் 01இல் உள்ளவாறு, புதிய இலங்கையின் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க ஆரம்ப நிலுவை தயாரிக்கப்படுவதனை பரிசீலனையில் கொண்டு அதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இது எதிர்காலத்தில் இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கான புதிய கணக்கீட்டு அடிப்படையினை உருவாக்குமென்பதுடன் இது குழுமமானது 2013 மாச்சு 31இல் முடிவடைகின்ற ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை தயாரிக்கும் போது தேவைப்படுத்தப்படும் புதிய இலங்கை கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமடைகின்ற இடங்களும் குழுமத்தின் நிதியியல் கூற்றுக்களின் மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கக் கூடிய விடயங்களும் கீழே காட்டப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் தோன்றக்கூடிய தாக்கங்களின் அளவினைக் குழுமம் தற்பொழுது ஆராய்ந்து வருகிறது.

(அ) இலங்கையின் நிதியியல் அறிக்கையிடல் நியமம் 1 - இலங்கையின் கணக்கீட்டு நியமத்தினை முதல் தடவையாக பின்பற்றுவது, குழுமத்தினால் புதிய இலங்கைக் கணக்கீட்டு நியத்திற்கு மாறிச் செல்லும் திகதியன்று புதிய ஆரம்ப இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமத்தினை தயாரித்து சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்துகின்றது. குழுமமானது, அதன் ஆரம்ப புதிய இலங்கை கணக்கீட்டு நியம நிதியக் கூற்றுக்களிலுள்ள அதே கணக்கீட்டுக் கொள்கைகளை அதன் முதலாவது புதிய இலங்கைக் கணக்கீட்டு நியம நிதியியல் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஒப்பிடத்தக்க காலப்பகுதி முழுவதும் பயன்படுத்த முடியம். இலங்கை கணக்கீட்டு நியமம் 1 - நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு, நிறுவனமொன்று பங்கு மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்களை, பங்கு மூலதனத்தில் ஏற்படும் அனைத்துச் சொந்தக்காரர்களினதும் மாற்றங்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்துகிறது. பங்கு மூலதனத்திலுள்ள சொந்தக்காரர்களல்லாதவர்களின் அனைத்து மாற்றங்களும் அனைத்தையுமுள்ளடக்கிய ஒரு கூற்றில் சமர்ப்பிக்குமாறு அல்லது இரண்டு கூற்றுக்களில் (தனியானதொரு வருமானக் கூற்று அத்துடன் அனைத்து வருமானத்தையும் உள்ளடக்கிய கூற்றில்) சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூறுகள், பங்கு மூலதனத்தின் மாற்றங்களைக் கொண்ட கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இந்நியமமும் குழுமத்தினை, நிறுவனத்தின் குறிக்கோள்கள், கொள்கைகள் என்பனவற்றை மதிப்பிடுவதற்கும் முகாமைத்துவ மூலதனத்தினை செயற்படுத்தவும் இந்நிதியியல் கூற்றுக்களின் பயன்படுத்துநர்களை இயலச் செய்யும் விதத்தில் தகவல்களை வெளிப்படுத்துவதற்கும் தேவைப்படுத்துகிறது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 - சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள், அங்கீகரிக்கப்படும் திகதியில் காசு விலைச் சமநிலையினைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விடயமொன்றினை அளவிடுவதற்குக் கம்பனியினைத் தேவைப்படுத்துகின்றது. கொடுப்பனவுகள் வழமையான கடன்பாட்டுக் காலத்திற்கு அப்பால் பிற்போடப்படுமாயின் அத்தகைய வட்டிகள் இலங்கை கணக்கீட்டு நியமம் 23 கடன்பாட்டுச் செலவிற்கிணங்க மூலதனமயப்படுத்தப்பட்டாலொழிய, காசிற்குச் சமமான தொகையில் மொத்தக் கொடுப்பனவுகளுக்கிடையிலான வேறுபாடுகள் இக்காலப்பகுதிக்கான வட்டியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

மற்றைய சுற்றாடல்களைத் திருத்தியமை மற்றும் அதனையொத்த செலவுகளை உள்ளடக்கிய அனைத்து அமைவிடத் திருத்தச் செலவுகளும் அத்தகைய செலவுகள் சொத்துக்களின் பயன்பாட்டுக் காலப்பகுதியில் தேய்வடையக்கூடும் என்பதனால் ஆரம்ப அங்கீகரிப்பில் மதிப்பிடப்பட்டு மூலதனமயப்படுத்தப்பட வேண்டும்.

இந்நியமங்கள், சொத்துக்கள் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தின் தேய்வினைத் தேவையானவிடத்து சொத்துக்களின் எஞ்சிய பெறுமதி தேய்மானப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் கழிக்கப்படுகின்றன. இதுவும் சொத்தொன்றின் குறிப்பிடத்தக்க கூறுகள் தேய்மானத்திற்காக வெவ்வேறாக பதியப்படுவதனைத் தேவைப்படுத்துகின்றது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 32 - நிதியியல் கருவிகள்: சமர்ப்பித்தல் இலங்கை கணக்கீட்டு நியமம் 39 - நிதியியல் கருவிகள்: அங்கீகரிப்பு மற்றும் அளவிடல் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கை நியமம் 7 - வெளிப்படுத்துகைகள் அங்கீகரிக்கப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள், நிதியியல் பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனக் கருவிகள் என்பனவற்றில் நடைமுறை முறைக்கான மாற்றங்களில் விளைவுகளை ஏற்படுத்தும். இந்நியமங்கள் நிதியியல் சொத்துக்கள்மற்றும் நிதியியல் பொறுப்புக்களை ஆரம்ப அளவிடலில் சந்தைப் பெறுமதியில் அளவிடப்படுவதனை தேவைப்படுத்தும்.

நிதியியல் சொத்துக்கள் அளவிடப்பட்டமையினைத் தொடர்ந்து, இலாபம் மற்றும் நட்டம் என்பனவற்றின் மூலம் சந்தைப் பெறுமதியாக வகைப்படுத்தப்படுவதுடன், முறையே அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் என்பனவற்றின் கூற்றுக்களினூடாக வழிப்படுத்தப்பட்ட இலாபம் மற்றும் இழப்புடன் சந்தைப் பெறுமதியில் விற்பனைக்கும் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

முதிர்ச்சிக்கு, கடன்களுக்கு மற்றும் பெறத்தக்கவைகளுக்கு வைத்திருக்கப்பட்டவை என வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள், இதன் பின்னர் பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படவுள்ளன. இச்சொத்துக்களை, சொத்துக்களின் ஆரம்ப அங்கீகரித்தலுக்குப் பின்னர் (இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில்) ஏற்படுகின்ற கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக, நிதியியல் சொத்துக்கள் அல்லது குழுமத்தின் நிதியியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீதான நம்பகமான இழப்பு (இழப்புக்கள்) ஏற்படும் சந்தர்ப்பத்தில் நம்பகமான மதிப்பீடொன்றுடன் சேர்த்து பழுதுறும் வெளிப்படையான ஏதேனும் சான்றுகளுக்காக மதிப்பிட வேண்டிய தேவை காணப்படுகிறது. எனவே, பழுதுறும்தன்மையினை மதிப்பிடுகின்ற தற்போதைய முறைகள் இப்புதிய நியமங்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

நிதியியல் பொறுப்புக்கள் ஒன்றில் இலாபத்தினூடாக அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியில் அல்லது பதிவழிப்புச் செலவாக வகைப்படுத்தப்படல் வேண்டும். தற்பொழுது, குழுமம் அடையாளம் காணப்படாது, நியமத்தின் தேவைக்கேற்றவாறு நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் வகைப்படுத்தப்பட்டு அளவிடப்படுவதுடன் ஐந்தொகையின்மீதான குறிப்பிட்ட பெறுதிச் சாதனங்களும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

(ஈ) பன்னாட்டு நிதி அறிக்கையிடல் விளக்கக் குழு 4 - சட்ட ரீதியான வடிவத்தில் இடம்பெறாத குத்தகைகளை கையாள்வதற்கான ஒழுங்குகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் ஒழுங்காகவுள்ளனவா என்பதனை தீர்மானிக்கின்றதெனினும், அவ்வாறிருப்பினும் இணைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கான சொத்துக்கள், பொறிகள் அல்லது கருவிகள் போன்ற குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களின் உரிமைகளை தெரிவிக்கும்.

சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமைகளைத் தெரிவிப்பதற்கான ஒழுங்குகளை மதிப்பிடுவது ஒழுங்குகளின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இம்மதிப்பீட்டின் குறிப்பிடத்தக்கதொரு கூறு எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் (பொருளாதார நன்மைகள்) மீதான பகுப்பாய்வினைக் கொண்டிருக்கும்.

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம், இலங்கை கணக்கீட்டு நியமம் 10 இற்கான திருத்தமொன்றினைச் செய்ததன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 10 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளில் ஏற்படும் மாற்றங்கள் - பந்திகள் 30 மற்றும் 31ஆம் பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் 2012 சனவரி 01 இற்கு முன்னர் தொடங்கும் நிதியியல் காலப்பகுதி தொடர்பாக தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்களுக்கு ஏற்புடைத்தாகாது என்பதுடன் இதன் காரணமாக இம்மாற்றத்தின் தாக்கம் இந்நிதியியல் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படவில்லை.

## 3. சொத்து, பொறி மற்றும் சாதனம்

### 3.1 தொகுதி

| | காணி, கட்டடங்கள் | பொறி மற்றும் சாதனம் | தொழிற்பாட்டு குத்தகைகளிலான வானூர்தி/ எந்திரங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் | வானூர்தியுடன் தொடர்பான சாதனங்கள் | நிதிக் குத்தகையின் கீழ் உள்ள பொறி மற்றும் சாதனம் | செயற்பாட்டிலுள்ள மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **செலவு/ மீள்மதிப்பீடு** | | | | | | | |
| 2011 ஏப்பிறல் 1ஆம் நாளன்று உள்ளவாறான மீதி | 2,936.32 | 4,748.07 | 560.96 | 5,469.99 | - | 197.80 | 13,913.14 |
| கொள்வனவு/ மாற்றியமைத்தல்கள்/ மீள்மதிப்பீடு | 552.11 | 271.89 | 415.25 | 388.61 | 1,208.03 | 882.04 | 3,717.93 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | 0.05 | (33.61) | - | - | - | (553.56) | (587.12) |
| விற்பனைகள்/ அகற்றல்கள் | (82.97) | (91.40) | - | (22.56) | - | - | (196.93) |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | **3,405.51** | **4,894.95** | **976.21** | **5,836.04** | **1,208.03** | **526.28** | **16,847.02** |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| 2011 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி | 662.11 | 3,613.77 | 516.44 | 4,473.13 | - | - | 9,265.45 |
| ஆண்டிற்கான கட்டணம் | 142.38 | 340.28 | 46.00 | 240.97 | 41.99 | - | 811.62 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | (264.63) | (27.46) | - | (0.93) | - | - | (293.02) |
| விற்பனைகள்/ அகற்றல்கள் | (79.50) | (91.40) | - | (4.56) | - | - | (175.46) |
| **2012 மாச்சில் 31இல் உள்ளவாறு மீதி** | **460.36** | **3,835.19** | **562.44** | **4,708.61** | **41.99** | **-** | **9,608.59** |
| **2012 மாச்சில் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **2,945.15** | **1,059.76** | **413.77** | **1,127.43** | **1,166.04** | **526.28** | **7,238.43** |
| **2011 மாச்சில் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **2,274.21** | **1,134.30** | **44.52** | **996.86** | **-** | **197.80** | **4,647.69** |

**3.2** (அ) இவ்வாண்டில், கம்பனியின் சொத்து, பொறி மற்றும் சாதனங்கள் என்பன சந்தைப் பெறுமதியில் தனிப்பட்ட மதிப்பீட்டாளரான திரு ரஞ்சன் ஜே சமரகூனினால் தேய்மான அகற்றல் அடிப்படையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டன. அத்தகைய மீள் மதிப்பீட்டின் பெறுபேறுகள் 2012 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீள் மதிப்பீட்டிலிருந்து தோன்றிய மிகை மீள் மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டன.

2011 மாச்சில் முடிவடைந்த ஆண்டிற்கான துணைக் கம்பனியினது சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் சந்தைப் பெறுமதி தனிப்பட்ட மதிப்பீட்டாளரான திரு. பி.பீ. கலுகலகெதரவினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்டன. காணியும் கட்டடமும் தேறிய வருமான அடிப்படையில் மதிப்பிடப்பட்டதுடன், எஞ்சிய பொறிகளும் சாதனங்களும் தேய்மான மீள்அகற்றல் செலவு அடிப்படையில் மதிப்பிடப்பட்டன. அத்தகைய மீள்மதிப்பீட்டின் பெறுபேறுகள் 2010 திசெம்பரில் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீள்மதிப்பீட்டிலிருந்து தோன்றிய மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டன.

(ஆ) இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்றுசேர்ந்த பெறுமதி ரூ.2,692.37 மில்லியன்களாகும் (2011 - ரூ.908.53 மில்லியன்) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் ரூ.1,503.93 மில்லியன் (2011 - ரூ.968.39 மில்லியன்).

(இ) குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக ரூ.8,479.37 மில்லியன்களாகக் (2011 - ரூ.8,310.91 மில்லியன்) காணப்பட்டன.

## 3. சொத்து, பொறி, சாதனம் (தொடர்ச்சி)

### 3.3 கம்பனி

| | காணி, கட்டடங்கள் | பொறி மற்றும் சாதனம் | தொழிற்பாட்டு குத்தகைகளிலான வானூர்தி/ எந்திரங்களுக்கு செய்யப்பட்ட திருத்தங்கள் | வானூர்தியுடன் தொடர்பான சாதனங்கள் | நிதிக் குத்தகையின் கீழ் உள்ள பொறி மற்றும் சாதனம | செயற்பாட்டிலுள்ள மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **செலவு/ மீள்மதிப்பீடு** | | | | | | | |
| 2011 ஏப்பிறல் 1ஆம் நாளன்று உள்ளவாறான மீதி | 1,688.12 | 3,852.20 | 560.96 | 5,469.99 | - | 197.80 | 11,769.07 |
| கொள்வனவு/ மாற்றியமைத்தல்கள்/ மீள் மதிப்பீடு | 552.11 | 184.57 | 415.25 | 388.61 | 1,208.03 | 882.04 | 3,630.61 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | 0.05 | (33.61) | - | - | - | (553.56) | (587.12) |
| விற்பனைகள்/ அகற்றல்கள் | (82.97) | (91.40) | - | (22.56) | - | - | (196.93) |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | **2,157.31** | **3,911.76** | **976.21** | **5,836.04** | **1,208.03** | **526.28** | **14,615.63** |
| **ஒன்றுசேர்ந்த தேய்மானம்** | | | | | | | |
| 2011 ஏப்பிறல் 1இல் உள்ளவாறான மீதி | 655.56 | 3,565.12 | 516.44 | 4,473.13 | - | - | 9,210.25 |
| ஆண்டிற்கான கட்டணம் | 79.97 | 148.28 | 46.00 | 240.97 | 41.99 | - | 557.21 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | (264.62) | (27.46) | - | (0.93) | - | - | (293.01) |
| விற்பனைகள்/ அகற்றல்கள் | (79.50) | (91.40) | - | (4.56) | - | - | (175.46) |
| **2012 மாச்சில் 31இல் உள்ளவாறு மீதி** | **391.41** | **3,594.54** | **562.44** | **4,708.61** | **41.99** | **-** | **9,298.99** |
| **2012 மாச்சில் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **1,765.90** | **317.22** | **413.77** | **1,127.43** | **1,166.04** | **526.28** | **5,316.64** |
| **2011 மாச்சில் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **1,032.56** | **287.08** | **44.52** | **996.86** | **-** | **197.80** | **2,558.82** |

**3.4** (அ) கம்பனியினது சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் சந்தைப் பெறுமதி தனிப்பட்ட மதிப்பீட்டாளரான திரு. ரஞ்சன் ஜே சமரகூனினால் தேய்மான அகற்றல் அடிப்படையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிர்ணயிக்கப்பட்டன. காணியும் கட்டடமும் தேறிய வருமான அடிப்படையில் மதிப்பிடப்பட்டதுடன் எஞ்சிய பொறிகளும் சாதனங்களும் தேய்மான அகற்றல் செலவு அடிப்படையில் மதிப்பிடப்படட்ன. அத்தகைய மீள்மதிப்பீட்டின் பெறுபேறுகள் 2012 பெப்புருவரியில் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து இந்நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மீள்மதிப்பீட்டிலிருந்து தோன்றிய மிகை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டன. நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக் கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டு செல்லப்பட்ட தொகைச் சொத்துக்கள் கிரயமற்ற தேய்மானத்தில் பின்வருமாறு கொண்டு செல்லப்பட்டன:

| சொத்துக்களின் வகுப்பு | செலவு | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டு செல்லப்பட்டிருக்குமாயின் ஒன்றுசேர்ந்த தேய்மானம் | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2012 | கொண்டு செல்லப்படும் தேறிய தொகை 2011 |
|---|---|---|---|---|
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| காணி மற்றும் கட்டடங்கள் | 1,176.97 | 278.15 | 898.82 | 870.58 |

(ஆ) இவ்வாண்டில், குழுமம் கொள்வனவு செய்த சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் ஒன்ற சேர்ந்த பெறுமதி ரூ.2,605.05 மில்லியன்களாகும் (2011 - ரூ.833.99 மில்லியன்) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கொள்வனவிற்காக இவ்வாண்டில் செய்யப்பட்ட காசுக் கொடுப்பனவுகள் ரூ.1,428.75 மில்லியன் (2011 - ரூ.894.13 மில்லியன்).

(இ) குழுமத்தின் சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகள் முழுமையாக தேய்மானமடைந்த சொத்துக்களை உள்ளடக்கி மொத்தமாக ரூ.8,451.82 மில்லியன்களை (2011 - ரூ.8,308.68 மில்லியன்) கொண்டிருந்தது.

## 4. முக்கியமான பழுதுபார்ப்பு மற்றும் வானூர்தி எந்திரங்களின் தரமுயர்த்தல்

குழுமம்/ கம்பனி

| | 2012<br>ரூ. மில். | 2011<br>ரூ. மில். |
|---|---|---|
| **செலவு** | | |
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 11,738.70 | 9,415.87 |
| இவ்வாண்டில் ஏற்பட்டவை (தேறிய) | 3,425.85 | 2,593.13 |
| இவ்வாண்டில் அங்கீகரிக்கப்படாதவை | (1,078.64) | (270.30) |
| **மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | **14,085.91** | **11,738.70** |
| **ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு** | | |
| ஏப்பிறல் 1இல் உள்ளவாறு மீதி | 5,658.34 | 3,459.79 |
| ஆண்டிற்கான பதிவழிப்பு | 2,821.33 | 2,468.85 |
| இவ்வாண்டில் அங்கீகரிக்கப்படாதவை | (1,078.64) | (270.30) |
| **மாச்சில் 31இல் உள்ளவாறு மீதி** | 7,401.03 | 5,658.34 |
| **மாச்சில் 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **6,684.88** | **6,080.36** |

## 5. வானூர்தி பேணல் ஒதுக்கு

குழுமம்/ கம்பனி

| | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | ஓராண்டிற்குள் அறவிடத்தக்க தொகை<br>ரூ. மில். | ஓராண்டிற்குப் பின்னர் அறவிடத்தக்க தொகை<br>ரூ. மில். | மொத்தம்<br>ரூ. மில். | ஓராண்டிற்குள் அறவிடத்தக்க தொகை<br>ரூ. மில். | ஓராண்டிற்குப் பின்னர் அறவிடத்தக்க தொகை<br>ரூ. மில். | மொத்தம்<br>ரூ. மில். |
| வானூர்தி பேணல் ஒதுக்கு (குறிப்பு 5.1) | 2,608.50 | 15,372.86 | 17,981.36 | 2,506.16 | 8,849.84 | 11,356.00 |

| | 2011 ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி<br>ரூ. மில். | கொடுப்பனவுகள்<br>ரூ. மில். | ஒன்றுசேர்ந்த வட்டி<br>ரூ. மில். | அறவிடல்கள்<br>ரூ. மில். | 2012 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி<br>ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| 5.1 வானூர்தி பேணல் ஒதுக்கு | 11,356.00 | 6,483.41 | 59.79 | (2,156.71) | 15,742.49 |
| **கழி:** ஐயத்திற்குரிய அறிவிடலுக்கான ஒதுக்கு | | | | | (208.48) |
| தேறல் செய்யப்படாத செலாவணி நன்மைகள் | | | | | 2,447.35 |
| **தேறிய அறிவிடல்கள்** | | | | | **17,981.36** |

## 6. அருவச் சொத்துக்கள்

| **கணனி மென்பொருள்** | குழுமம்<br>ரூ. மில். | கம்பனி<br>ரூ. மில். |
|---|---|---|
| **செலவு** | | |
| 2011 ஏப்பிறல் 01 இல் உள்ளாவறு மீதி | 681.87 | 654.03 |
| கொள்வனவுகள்/ திருத்தியமைத்தல்கள் | 1.55 | 1.40 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | 17.75 | 17.75 |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | **701.17** | **673.18** |
| **ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு** | | |
| 2011 ஏப்பிறல் 01இல் உள்ளவாறான மீதி | 570.18 | 543.96 |
| ஆண்டிற்கான கட்டணம் | 56.95 | 55.52 |
| மாற்றல்கள்/ சீராக்கங்கள் | 17.93 | 17.93 |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறு மீதி** | **645.06** | **617.41** |
| **2012 மாச்சு 31இல் உள்ளவாறு ஏட்டுப் பெறுமதி** | **56.11** | **55.77** |
| **2011 மாச்சு 31இல் உள்ளவாறு தேறிய ஏட்டுப் பெறுமதி** | **111.69** | **110.07** |

கம்பனியின் அருவச் சொத்துக்கள் பதிவழிக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ.419.44 மில்லியன் (2011 - ரூ.401.22 மில்லியஙன்) கொண்ட முழுத்தொகையினையும் உள்ளடக்கியிருந்தது.

## 7. முதலீடுகள்

### 7.1 குழுமம்

| | | | 2012 செலவு ரூ. மில். | 2011 செலவு ரூ. மில். |
|---|---|---|---|---|
| நடைமுறையல்லாதவை | | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு (குறிப்பு 7.3) | | | 14,165.94 | - |
| | கூட்டிணைக்கப் பட்ட நாடு | 2012 வசமுள்ளவை % | | |
| பங்குப் பிணையங்களில் முதலீடுகள் | | | | |
| - SITA கூட்டிணைக்கப்பட்ட நிறுவகம் (குறிப்பு 7.4) | நெதர்லாந்து | | 65.83 | 64.96 |
| - எயார் லங்கா (பிறைவேட்) லிமிடெட் (40,000 பங்குகள்) | இலங்கை | 100% | 0.40 | 0.40 |
| | | | 66.23 | 65.36 |
| | | | **14,232.17** | **65.36** |

### 7.2 கம்பனி

| | | | | |
|---|---|---|---|---|
| நடைமுறையல்லாதவை | | | | |
| திறைசேரி முறிகளில் முதலீடு (குறிப்பு 7.3) | | | 14,165.94 | - |
| | கூட்டிணைக்கப் பட்ட நாடு | 2012 வசமுள்ளவை % | | |
| பங்கு மூலதனப் பிணையங்களில் முதலீடுகள் | | | | |
| - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் [தேறிய சொத்துப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட பணிப்பாளர்களின் மதிப்பீடு 4.63 பில்லியன் (2011 - ரூ.2.18 பில்லியன்)] | இலங்கை | 100% | 42.24 | 42.24 |
| - SITA கூட்டிணைக்கப்பட்ட நிறுவகம் (குறிப்பு 7.4) | நெதர்லாந்து | | 65.83 | 64.96 |
| - எயார் லங்கா (பிறைவேட்) லிமிடெட் (20,000 பங்குகள்) | இலங்கை | 50% | 0.20 | 0.20 |
| | | | 108.27 | 107.40 |
| | | | **14,274.21** | **107.40** |

**7.3** இவ்வாண்டுப் பகுதியில், இலங்கை அரசாங்கம் ரூ.15.4 பில்லியன் முகப்புப் பெறுமதியில் அமைந்த திறைசேரி வடிவிலமைந்த முதலீடுகளை கம்பனியில் மேற்கொண்டது. ஆண்டிற்கு 8 சதவீதக் கூப்பன் வட்டி வீதத்தினைக் கொண்ட இம்முறிகள் 2017 சனவரியில் முதிர்ச்சியடையும். பங்குடமையாளர்களின் ஒப்புதலுக்குட்பட்டு, பணிப்பாளர் சபை உரிமை வழங்கல்கள் வடிவில் சாதாரண பங்குகளை வழங்க ஒப்புதலளித்தது. இப்பங்கு வழங்கல்களுக்கான பங்குடமையாளர்களின் ஒப்புதல் அடுத்து வரும் நிதியாண்டின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | ரூ. மில். |
|---|---|
| முகப்புப் பெறுமதி | 15,423.08 |
| கழி: பதிவழிக்கப்படாத கழிவிடல் | (1,257.14) |
| முதலீட்டுப் பெறுமதி | 14,165.94 |

**7.4** SITA கூட்டிணைக்கப்பட்ட நிறுவகத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் நிலையான முதிர்ச்சி இல்லாமல் விலைக்குறிப்பீடு செய்யப்படாத வைப்புச் சான்றிதழ்களைப் பிரதிபலிக்கிறது.

## 8. இருப்புக்கள்

| | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|
| நுகரத்தக்கவை மற்றும் உதிரிகள் | 4,853.46 | 5,135.18 | 4,757.39 | 5,059.83 |
| மூலப்பொருட்கள் | 189.79 | 159.33 | - | - |
| தீர்வையற்ற வணிகப்பொருட்கள் | 54.79 | 68.02 | 54.79 | 68.02 |
| கழி: மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஒதுக்கம் (குறிப்பு 8.1) | (584.28) | (872.34) | (579.80) | (867.86) |
| | **4,513.76** | **4,490.19** | **4,232.38** | **4,259.99** |

## 8.1 மெதுவாக அசையும் இருப்புக்களுக்கான ஏற்பாடு

| | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|
| ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி | (872.34) | (777.43) | (867.86) | (772.95) |
| இவ்வாண்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | (156.65) | (207.16) | (156.65) | (207.16) |
| இவ்வாண்டில் பதிவழிக்கப்பட்டவை | 389.46 | 3.30 | 389.46 | 3.30 |
| இவ்வாண்டில் மாற்றிப் பதியப்பட்டவை | 55.25 | 108.95 | 55.25 | 108.95 |
| மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | (584.28) | (872.34) | (579.80) | (867.86) |

## 9. வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை

| | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|
| வர்த்தகத்திலிருந்து பெறத்தக்கவை | 11,208.17 | 8,500.45 | 10,676.17 | 8,248.65 |
| **கழி:** ஐயத்திற்கான கடன்பாடுகளுக்கான ஏற்பாடுகள் | (334.11) | (334.11) | (309.44) | (309.44) |
| | 10,874.06 | 8,166.34 | 10,366.73 | 7,939.21 |
| ஏனைய கடன்பட்டோர் | 1,487.36 | 1,143.65 | 1,355.79 | 980.39 |
| வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 1,472.51 | 1,196.52 | 1,387.66 | 1,093.95 |
| | 13,833.93 | 10,506.51 | 13,110.18 | 10,013.55 |
| கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள், முற்பணங்கள் (குறிப்பு 9.1) | 63.37 | 47.20 | 50.74 | 41.72 |
| | **13,897.30** | **10,553.71** | **13,160.92** | **10,055.27** |

## 9.1 கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள்

கம்பனி அலுவலர்களுக்கு ரூ.20,000இற்கு மேல் வழங்கப்பட்ட கடன்களின் விபரங்கள் மாத்திரம் கீழே தரப்பட்டுள்ளன.

| | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|
| ஏப்பிறல் 01இல் உள்ளவாறு மீதி | 18.31 | 12.90 | 2.61 | 2.52 |
| இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன் | 12.71 | 9.52 | 2.69 | 2.74 |
| மீள்கொடுப்பனவுகள் | (9.37) | (4.11) | (3.04) | (2.65) |
| மாச்சு 31இல் உள்ளவாறு மீதி | 21.65 | 18.31 | 2.26 | 2.61 |

## 10. காசுப்பாய்ச்சல் கூற்றிலுள்ள காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் கூறுகள்

| | குழுமம் 2012 ரூ. மில். | குழுமம் 2011 ரூ. மில். | கம்பனி 2012 ரூ. மில். | கம்பனி 2011 ரூ. மில். |
|---|---|---|---|---|
| **10.1 சாதகமான காசு மற்றும் காசிற்குச் சமமான மீதிகள்** | | | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 1,749.57 | 1,660.96 | 1,455.24 | 1,358.89 |
| குறுங்கால வைப்புக்கள் | 278.08 | 96.28 | 278.08 | 96.28 |
| | 2,027.65 | 1,757.24 | 1,733.32 | 1,455.17 |
| **10.2 சாதகமற்ற காசு மற்றும் காசிற்குச் சமமான மீதிகள்** | | | | |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் (குறிப்பு 14) | (5,366.04) | (5,610.36) | (5,366.04) | (5,610.36) |
